Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JANUARY 8, 2021

சனிக்கிழமை ஜனவரி 08, 2022 | ஒளி: 07 கதிர்: 200 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

எண்ணெய் குதங்கள் தொடர்பான அமைச்சரவைத் தீர்மானம்:

## இரத்து செய்யுமாறு மனுத் தாக்கல்



திருகோணமலை எண்ணெய் குதங்களை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய நிறுவனமொன்றுக்கு வழங்கும் வகையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையுடன் தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த அடிப்படை உரிமை மனு, உயர்நீதிமன்றத்தில் நேற்று (07) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவை, தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் வக்கமுல்ல உதித்த தேரர் சார்பில் சட்டத்தரணி சுனில் வட்டகல தாக்கல் செய்துள்ளார்.

மனுவில், பிரதிவாதிகளாக ஜனாதிபதிக்குப் பதிலாக சட்ட மாஅதிபர், ஜனாதிபதி செயலாளர், நிதியமைச்சர், பாதுகாப்பு செயலாளர், எரிசக்தி அமைச்சர், கணக்காய்வாளர் நாயகம் உள்ளிட்ட 47 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2




## தனியாருக்கும் ரூ.5,000?

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதைப் போல, தனியார் துறையைச் சார்ந்த ஊழியர்களுக்கும் 5,000 ரூபாயை வழங்குவது தொடர்பில், தொழில் திணைக்களத்தில் நேற்று (06) விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

"நாட்டிலுள்ள அனைத்து மக்களும் பொருளாதார ரீதியில் பாரிய சிக்கலை எதிர்கொண்டுள்ள நிலையில், அரச ஊழியர்களுக்கு மாத்திரம் இந்தக் கொடுப்பனவை வழங்குவது நீதியற்ற செயற்பாடாகும்" என்று தேசிய ஊழியர் சங்கத்தின் சுரங்க நாவலகே தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

கடினமான காலங்களில் இந்தியா இலங்கைக்கு

## ஆதரவாக இருக்கும்

'கடினமான காலங்களில் இலங்கைக்கு இந்தியா ஆதரவாக இருக்கும்" என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை எண்ணெய் குதங்கள் திட்டமானது இருதரப்பு எரிசக்தி பாதுகாப்பை அதிகரிக்குமென இந்தியா வரவேற்றது. இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுடனான தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், "இந்தக் கடினமான காலங்களில் இலங்கைக்கு இந்தியா ஆதரவளிக்கும்" என்றார்.



இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்கு புத்தாண்டு வாழ்த்துகள் தெரிவித்துக்கொண்ட ஜெய்சங்கர், "நம்பகரமான நண்பரான இந்தியா இந்தக் கடினமான காலங்களில் இலங்கைக்கு ஆதரவாக இருக்கும். நெருங்கிய தொடர்பில் இருக்க ஒப்புக்கொண்டேன்" என்று ஜெய்சங்கர் ட்வீட் செய்துள்ளார்.

இதேவேளை, கருத்துரைத்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சிடம், இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இந்தியா கடன் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கேட்டபோது, "அந்த நாட்டு மக்களுக்காக இந்தியா எப்போதும் துணை நிற்கும்" என்றார்.

தொடர்ச்சி P2



அமைச்சரவை

## 30ஐ விஞ்சாது

### அறிவித்தார் ஜனாதிபதி: மீறமாட்டேன் என்கிறார்

அரசியலமைப்பின் பிரகாரம் தனது அமைச்சரவையை 30 அமைச்சர்களாக மட்டுப்படுத்துவேன் எனவும், அமைச்சரவையில் கூடுதல் உறுப்பினர்களை இணைத்து வாக்குறுதியை மீறப் போவதில்லை எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள 1,000 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மொனராகலை, சியம்பலாண்டுவ மகா வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தும் வேலைத்திட்டம், நேற்று (07) முன்னெடுக்கப்பட்டது. இதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




சீன உர நிறுவனத்துக்கு

## 6.9 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டது

கடன் கடிதத்துக்கு அமைய சீன உர நிறுவனத்திற்கு 6.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளது. Qingdao Seawin Biotech Group Co., Ltd நிறுவனத்துக்கு இந்தத் தொகை நேற்று (07) செலுத்தப்படவுள்ளதாக இலங்கை மக்கள் வங்கி அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## முதலில் வருகின்ற 300 பேருக்கு சிலிண்டர்

யாழ்ப்பாண நகரில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் நேற்று (07) காத்திருந்தனர். யாழ்ப்பாணம் - வைத்தியசாலை வீதியிலுள்ள கொட்டடி பகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலைக்கு முன்பாக எரிவாயு சிலிண்டர்களுடன் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இதன்போது, 'முதல் வருகைதரும் 300 பேர்களுக்கு மட்டும் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படும்' எனும் அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 142 கோழிகளை தின்ற வெள்ளம்



■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, காத்தான்குடியில் கோழிப்பண்ணையில் வளர்க்கப்பட்ட 142 கோழிகள், வெள்ள அனர்த்தத்தால் இறந்துள்ளன.

தொடர்ச்சி P2

## பயணத்துக்கு தடையாக இருக்கோம்; பயணத்தையும் கைவிட போவதில்லை

### த.மு.கூ. சார்பில் மனோ, திகா, இராதா கூட்டறிக்கை

'இந்திய பிரதமருக்கு, இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளின் விண்ணப்பக் கடிதம்' என்று ஆரம்பிக்கப்பட்ட கூட்டு செயற்பாட்டில், சமீபத்தைய இந்திய வம்சாவளி மலையக தமிழரின் அபிலாஷைகளையும் உள்ளடக்குவதில் சிக்கலை எதிர்கொண்டதாலும், எமது பங்களிப்பு வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் சுதந்திர செயற்பாட்டுக்கு பாதகமாக இருப்பதை உணர்ந்ததாலும், இந்த செயற்பாட்டுக்கு வெளியில்



நின்று அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவோம் என்று மனோ கணேசன்

தொடர்ச்சி P2

## மைத்திரியின் கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிப்பு

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன விடுத்த கோரிக்கையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று (07) நிராகரித்துள்ளது.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்குமாறே மைத்திரி, தனது சட்டத்தரணிகளின் ஊடாக நீதிமன்றத்தில் கோரிநின்றார்.



## நுவரெலியாவில் இருநாள் மின்தடை

■ பி.கேதீஸ்



அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று (8) சனிக்கிழமை நாளை (9) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 8 மணித்தியாலங்கள், நுவரெலியா மாவட்டத்தில் சில பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் நுவரெலியா கிளை அறிவித்துள்ளது.

லிந்துலை வைத்தியசாலை, லிந்துலை நகரம், லெமிலியர், மட்டுக்கலை, சென் கூம்ஸ், பாமஸ்டன், கல்கந்தவத்தை, சமர்செட், லெங்டல், வங்கிஓயா, ரதெல்ல தோட்டங்கள், ரதெல்ல கிளப், உடரதெல்ல, சமர்செட் பங்களா, உடரதெல்ல இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகிய பகுதிகளில் மின்சார தடை ஏற்படுமென நுவரெலியா மின்சார சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில், நேற்று (07) மாலை 5.30மணிமுதல் இரவு 9.30 மணிவரையிலும் மின்தடை ஏற்பட்டிருந்தது.

## மியான்மாரில் இருந்து அரிசி வருகிறது



அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படுமாயின், பாதுகாப்பு நடவடிக்கையாக மியான்மாரிலிருந்து ஒரு இலட்சம் மெற்றிக்தொன் அரிசியை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

இறக்குமதி செய்யப்படும் அந்த அரிசி தொகையை, பாதுகாப்பு தொகையாக வைத்துக்கொள்ளப்படும் என்றும், அந்த அரிசியை ஜனவரி நிறைவடைவதற்குள் நாட்டில் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வர்த்தக அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த அரிசி கொடுக்கல் வாங்கல் தொடர்பில், இலங்கை மற்றும் மியான்மார் அரசாங்கங்களுக்கு இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டு கையொப்பமும் இடப்பட்டுள்ளது என்றும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

LK Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

# இரத்து செய்யுமாறு மனுத் தாக்கல்

திருகோணமலை எண்ணெய் குதங்களை அபிவிருத்தி செய்வதற்கான உடன்படிக்கை கொழும்பில் நேற்று முன்தினம் (06) கைச்சாத்திடப்பட்டது.

உடன்படிக்கையின் படி இந்தியாவின் நிர்வாகத்தின் கீழ் இருந்த 99 குதங்களில் 85 குதங்கள் இலங்கையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். திருகோணமலை எண்ணெய் குதங்கள் கட்டமைப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள இணக்கப்பாடு இந்தியாவுக்கு முழுமையாக வழங்கும் முயற்சியின் ஒரு கட்டமா? என தொழிற்சங்கள் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஆதரவாக இருக்கும்’

மீனவர்கள் விவகாரம் தொடர்பாக, கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கை அதிகாரிகளால் கடந்த மாதம் தடுத்து வைக்கப்பட்ட எஞ்சிய இந்திய மீனவர்களை விரைவில் விடுவிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் பாக்சி கூறினார்.

மொத்தம் 68 மீனவர்கள் மற்றும் 10 படகுகளை இலங்கை தடுத்து வைத்துள்ளது. இவர்களில் 12 மீனவர்கள் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளனர், மீதமுள்ளவர்களை விடுவிக்க இந்திய உயர் ஸ்தானிகராலயம் செயல்பட்டு வருகின்றது என்றும் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

கடற்றொழில் தொடர்பான கூட்டு செயற்குழு கூட்டத்தை விரைவில் நடத்துவது குறித்து இரு தரப்பும் ஆலோசனை நடத்தி வருவதாக அவர் கூறினார். இந்தியாவுடன் இணைந்து திருகோணமலை எண்ணெய் தாங்கி குதங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்துக்கு இலங்கையின் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள நிலையில், இது இருதரப்பு எரிசக்தி ஒத்துழைப்பை அதிகரிக்கும் என்றும் பாக்சி கூறினார்.

"திருகோணமலை எண்ணெய் குதங்களை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதாக செய்திகளை பார்த்தோம். இலங்கையுடனான எமது இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கியப் பகுதி எரிசக்திப் பாதுகாப்பு" என்று அவர் கூறினார்.

"திருகோணமலை எண்ணெய் தாங்கி குதங்களை நவீனமயமாக்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் நாங்கள் ஆலோசனை நடத்தி வருகிறோம். இது எரிபொருளைச் சேமிப்பதை அனுமதிக்கும் மற்றும் இருதரப்பு வலுசக்தி பாதுகாப்பை அதிகரிக்கும்," என்று பாக்சி மேலும் கூறினார்.

திருகோணமலை எண்ணெய் தாங்கி பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தங்கள் வியாழக்கிழமை(6) கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

லங்கா ஐ.ஓ.சி.யின் கீழ் இருந்த திருகோணமலை எண்ணெய் தாங்கி குதங்களில் உள்ள பெரும்பாலான தாங்கிகள் தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் அபிவிருத்தித் திட்டமாக வழங்கப்படுமென வலுசக்தி அமைச்சர் அலுவலகம் வியாழன் (6) பிற்பகல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் கடன் வரியை நீட்டிப்பது குறித்த கேள்விக்கு, கடந்த மாதம் இலங்கை நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, புதுடெல்லிக்கு சென்றதை பாக்சி நினைவூட்டினார்.

"இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் இந்த சவால்களை எதிர்கொள்வதில் தனது அரசாங்கத்தின் அணுகுமுறை குறித்து அவர் இந்திய தரப்புக்கு விளக்கினார். இந்தியா எப்பொழுதும் இலங்கை மக்களுக்கு ஆதரவாக நிற்கிறது மற்றும் இலங்கை நமது அண்டை நாடுகளுக்கு முதன்மையான கொள்கையின் ஒரு முக்கிய அங்கமாகும்," என்று அவர் கூறினார்.

ராஜபக்ஷவின் பயணத்தின் போது, உணவு மற்றும் சுகாதார பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, செலுத்தும் நிலுவை பிரச்சினைகள் மற்றும் இலங்கையில் இந்திய முதலீடுகள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை ஆழமாக்குவது குறித்து விவாதித்ததாக அவர் கூறினார். "மேலும் ஆலோசனைகள் நடந்து வருகின்றன என்பதை நான் புரிந்துகொள்கிறேன்," என்று பாக்சி கூறினார்.

# 30ஐ விஞ்சாது

பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஒரே குழுவாக இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அனைத்து பின்னடைவுகளையும் குழுவாக நிவர்த்தி செய்வது கூட்டுப் பொறுப்பாகும்.

குறைபாடுகளை மாத்திரம் விமர்சித்தால் அது குறித்த நபரின் திறமையின்மையையே வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், மக்கள் சார்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பது எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்

# தனியாருக்கும் ரூ.5,000?

ஆகையால், தனியார் துறை ஊழியர்கள் அனைவருக்கும் 5,000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதில் தலையீடு செய்யுமாறு தேசிய ஊழியர் சங்கத்தின் சுரங்க நாவுலகே, தொழில் அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே, தோட்டத் தொழிலாளர்களுக்கும் 5,000 ரூபாய் கொடுப்பனவை அவர்களது நாளாந்த சம்பளத்துடன் இணைத்து வழங்குமாறு இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொழில் அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் பல தொழிற்சங்கங்களின் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# 6.9 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டது

சீன உர நிறுவனத்துக்கு கட்டணம் செலுத்துவதை இடைநிறுத்தி கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு, 48 மணித்தியாலங்களின் பின்னர் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

குறித்த சீன நிறுவனத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த தடை நீக்கப்பட்டிருந்தது.

கொழும்பு கமர்ஷல் உர நிறுவனம் மற்றும் லங்கா உர நிறுவனம் ஆகியன இதற்கான உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டதாக கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்துக்கு கடந்த 3 ஆம் திகதி அறிவித்திருந்தன.

# 142 கோழிகளை தின்ற வெள்ளம்

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த அடைமழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தில், காத்தான்குடி முதலாம் குறிச்சி பகுதியிலுள்ள கோழிப்பண்ணையில் வளர்க்கப்பட்ட 142 கோழிகள் வியாழக்கிழமை (06) இறந்துவிட்டன என கோழிப்பண்ணையின் உரிமையாளர் தெரிவித்தார்.

# பயணத்துக்கு தடையாக இருக்கோம்; பயணத்தையும் கைவிட போவதில்லை

தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளத.

இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் என்ற பொதுநோக்கில், இந்த செயற்பாட்டை ஆரம்பித்த ஏற்பாட்டாளர்கள் செல்வம் அடைக்கலநாதன் எம்பி, தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி, இணைப்பாளர் சுரேன் குருசுவாமி ஆகியோருக்கு வாழ்த்துக்களையும் த.மு.கூ தெரிவித்துள்ளது.

அதேவேளை பொது இணக்கப்பாட்டின் மூலம் பொது ஆவணம் தயாரிக்க முடியாமையை கருத்தில் கொண்டு மலையக தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி இந்திய பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் தனித்தனியாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் ஆவண கடிதம் எழுதப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

என்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் முடிவுகளை கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

முதல் கலந்துரையாடல், நோக்கம், இலங்கை தமிழரசு கட்சி உள்வாங்கல், பொது ஆவணகடிதம், பொது ஆவணகடிதம் நிராகரிப்பு உள்ளிட்ட தலைப்பின் கீழ் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. அதில், மலையக தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி ஆவணக்கடிதம் எழுத கூட்டணி முடிவு செய்துள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, பொது ஆவணம் தயாரிக்க முடியாமையை கருத்தில் கொண்டு சமீபத்தைய இந்திய வம்சாவளி மலையக தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பாரத பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் ஆவணக்கடிதம் எழுத தமிழ் முற்போக்கு கூட்டணி முடிவு செய்துள்ளது.

வடக்கு கிழக்கு உடன்பிறப்புகளுக்கு எமது ஒத்துழைப்பு தொடரும்

இப்பின்னணிகளிலேயே, தேவையற்ற முரண்பாடுகளை தவிர்க்கும் நோக்கில், "வடகிழக்கு தமிழ் கட்சிகளின் இந்த செயற்பாட்டுக்கு வெளியில் நின்று ஒத்துழைப்புகளை வழங்குவோம்" என்ற முடிவை நாம் எடுத்துள்ளோம். வடகிழக்கு உடன்பிறப்புகளுக்கு, வரலாறு முழுக்கவும் இதை நாம் செய்துள்ளோம். இனியும் செய்வோம். "உரிமைக்கு குரல் கொடுப்போம்; உறவுக்கு கை கொடுப்போம்" என்ற எமது கொள்கை தொடரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# சொய்சாபுரவில் தீ; இளைஞன் காயம்

மொரட்டுவை - சொய்சாபுர தொடர்மாடி குடியிருப்பிலுள்ள வீடொன்றில் நேற்று (07) மாலை பரவிய தீயினால், 19 வயதான இளைஞர் காயமடைந்துள்ளார்.

எரிகாயங்களுக்கு உள்ளான அவர், களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தீயைக் கட்டுப்படுத்துவதற்காக 02 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டுள்ளன மொரட்டுவை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவு தெரிவித்தது. தீ பரவலுக்கான காரணங்கள் இதுவரையிலும் கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னிச்சையான தீர்மானங்களால்

# நாடு அழிவுக்குள் சென்றுள்ளது

## சஜித் தெரிவிப்பு: ஆளுநருக்கு அடிப்படை கூட தெரியவில்லை என்கிறார்

பணம் அச்சடிக்கப்பட்டாலும் பணவீக்கம் அதிகரிக்காது என்பது பொருளாதாரத்தின் அடிப்படையாகும் எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அதுகூட தனக்கு தெரியாதவர் போல மத்திய வங்கியின் ஆளுநர் செயற்படுகின்றார் என்றும் கூறினார்.

இந்த நாட்டை ஆர்ஜென்டினா, சிம்பாப்வே, வெனிசுவேலா போன்ற நாடுகளை நோக்கித் தள்ளவே மத்திய வங்கியின் ஆளுநர் செயற்பட்டு வருகின்றனார். அரசாங்கத்தின் தன்னிச்சையான தீர்மானங்களினால் முழு நாடும் அழிவை நோக்கிச் சென்றுள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவின் பிரகாரம் செயற்படுத்தப்படும் "ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து மூச்சு"திட்டத்திற்கு இணைவாக ஆரோக்கியமான நாட்டை உருவாக்கும் நோக்கில் 'ஜன சுவய' திட்டத்தின் கீழ் "சத்காரய" திட்டத்தின் 35 ஆவது கட்டம் நேற்று (07) முன்னெடுக்கப்பட்டது.

இருபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து ஏழு ஆயிரம் ரூபாய் (ரூ.2,457,000) பெறுமதியான அத்தியாவசிய வைத்தியசாலை உபகரணங்கள் வவுனியா மாவட்ட தேசிய வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.இந் நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இருபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து ஏழு ஆயிரம் ரூபா (ரூ.2,457,000) பெறுமதியான Dialysis Machine with Portable RO System

இயந்திரம் ஒன்றே இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால், வவுனியா மாவட்ட தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ராஹுலிடம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் "ஜன சுவய" கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு 'எதிர்க்கட்சியின் மூச்சு' நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இது வரை 34 கட்டங்களில் 1,016 இலட்சம் (101,610,000) ரூபாய் பெறுமதி வாய்ந்த மருத்துவமனை உபகரணங்களை ஐக்கிய மக்கள் சக்தியால் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



LK Newspapers
Viber Community

## இலங்கை என்ன செய்யப்போகின்றது?

# ‘மறைமுக செலவு’கள்

டெசா



பிச்சைக்காரனுக்கு சுடுசோறு கிடைக்காது என்றொரு பேச்சுவழக்கு உண்டு. இன்று இலங்கையின் நிலைமையும் அதுவாகவே அமைந்துள்ளது. நாலாபக்கமும் கடன் சுமை, தேசிய நெருக்கடிகளை சமாளிக்க நிதி இல்லை, பணத்தை அச்சடித்து செலவுகளை கையாள நினைத்தாலும் இறக்குமதியை செய்ய டொலர் இல்லை. இந்த ஆண்டில் மாத்திரம் 6.7 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக செலுத்தியாக வேண்டும். இந்த ஆண்டு தொடக்கம் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு வரையில் இலங்கை 26 பில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

தேசிய ரீதியில் செலவு செய்ய வருமானம் இல்லாத நிலையிலும், வெளிநாட்டு கையிருப்பும் பற்றாக்குறையாகிய நிலையில் உண்மையான பிரச்சினைகளை மூடி மறைக்க வெவ்வேறு மாற்று வேலைத்திட்டங்களை கையாள அரசாங்கம் முயற்சித்தது. ஒரு பிரச்சினைக்கு தவறான தீர்வை வழங்க முயற்சித்ததன் விளைவாக பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்க ஆரம்பித்தன. ஆரம்பத்தில் இருந்தே பொருளாதார கொள்கையில் விட்ட தவறுகள் காரணமாக இன்று நெருக்கடிகளையும் அடுத்தடுத்து பல பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்துள்ளது.

இலங்கை வாங்கியுள்ள மொத்த கடன்களில் 50 சதவீதமானவை சர்வதேச பிணை முறிகள் மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும். சர்வதேச பிணை முறிகளில் கடன்களை பெற்றுக்கொள்ளும் வேளையில், அதற்கு எந்தவித நிபந்தனைகளும் இல்லை. உதாரணமாக கூறுவதென்றால், அபிவிருத்தி கடன்களை பெற்றுக்கொள்ளும் வேளையில் அந்த கடன்களில் வேறு செலவுகளை முன்னெடுக்க முடியாது. குறித்த அபிவிருத்தி திட்டத்திற்கான நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும். ஆனால், பிணை முறிகளில் பெற்றுக்கொள்ளும் வேளையில் அதனைக்கொண்டு நாம் செய்யவுள்ள வேலைத்திட்டம் என்னவென்பதைக் கூற வேண்டிய அவசியம் இல்லை.

அதற்கமையவே கடந்த 2007 ஆம் ஆண்டில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச பிணைமுறி கடனாக பெற்றுக்கொள்ளப்பட்டது. 2019 ஆம் ஆண்டாகும் வேளையில் இந்த தொகையானது 17,500 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளன. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களால் செய்யப்பட்ட முதலீடுகள் என்ன? எதற்காக பயன்படுத்தப்பட்டது? என்ற கேள்விக்கு பதில் இல்லை. கடன்கள் ஒருபோதும் குற்றமல்ல, ஆனால் அவ்வாறு வாங்கிய கடன்களில் செய்துகொண்ட முதலீடுகள் என்ன? அதனால் எமக்கு கிடைக்கும் வருமானம் என்ன என்பதில் தான் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

தவறான அரச கொள்கைகளே இந்த நெருக்கடிகளுக்கு காரணமாகும். குறிப்பாக, இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் வரிக்கொள்கையை மாற்றியமையே அனைத்து நெருக்கடிகளுக்கும் காரணமாகும். இதனால் 2020ஆம் ஆண்டில் மாத்திரம் 500 பில்லியன் அரச வருமானம் இல்லாது போனது. 2021 ஆம் ஆண்டிலும் இதே அளவிலான வருமானம் இல்லாது போனது. அடுத்து வரும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு இதன் தாக்கம் இருக்கும்.
இலங்கை வரி இராச்சியமா அல்லது கடன் இராச்சியமா என்ற கேள்விக்கு பல்வேறு வாத பிரதிவாதங்களை முன்வைக்கலாம். ஆனால், எமது கடன் சுமைகளை நாமே பார்த்துக்கொள்ளாது எதிர்கால சந்ததிக்கு கொடுத்தமை மிகப்பெரிய தவறாகும். மக்களின் பைகளுக்கு ஒரு சதம் கூட சென்றடையாது, அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதிலும், விமான நிலையங்களை அமைப்பதிலும் அர்த்தம் இல்லை. இதன் விளைவாக என்ன நடந்துள்ளது? உணவுக்காகவும் மருந்துக்காகவும் கை ஏந்த வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. எரிபொருள் தேவைக்காக நைஜீரியா, ஓமான் நாடுகளிடம் கடன் கேட்க வேண்டிய நிலைமை. வெளிநாட்டு கையிருப்பையே கடன்களில் நிரப்ப வேண்டிய மிக மோசமான நிலைக்கு நாடு வந்துவிட்டது. இது ஒன்றும் இலங்கையின் அடையாளமாகவோ, புகழாகவோ பெருமையாகவோ பேச முடியாது. பணம் தரமாட்டோம். மாறாக உணவு பொருட்களை தருகின்றோம் என சர்வதேசம் எம்மை மட்டந்தட்டும் அளவிற்கு இலங்கையை மண்டியிட வைத்துவிட்டனர் எமது தலைவர்கள். கொவிட் -19 வைரஸ் தொற்றுதான் எமது வீழ்ச்சிக்கு காரணம் என கூறுவது ஏற்றுக்கொள்ளவே முடியாத காரணமாகும். உலகிற்கே கொவிட் வைரஸ் சவாலாக அமைந்தது உண்மைதான். ஆனால் அது மட்டுமே இலங்கையின் பொருளாதாரத்திற்கு தாக்கத்தை செலுத்தவில்லை.
அரசாங்கம் தனது நம்பிக்கையையும் நிலையான உறுதிப்பாட்டையும் வளர்த்துக்கொள்ளவில்லை. அதுவே நாட்டின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகும். கொவிட் வைரஸுக்கு முன்னர், 33 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த பங்களாதேசின் வெளிநாட்டு கையிருப்பு தற்போது 44 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. கொவிட்டுக்கு முன்னர் 79 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த வியட்நாமின் வெளிநாட்டு கையிருப்பு தற்போது 105 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. ஆனால், இலங்கையிலோ கொவிட் வைரஸுக்கு முன்னர் 7.5 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த வெளிநாட்டு கையிருப்பு, தற்போது 2 பில்லியனுக்கும் குறைவடைந்துள்ளது. சீனாவிடம் கடன் வாங்கி அதனை 3.1 பில்லியனாக்கியுள்ளனர் என்பது வேறு விடயம். கொவிட் காலத்திலும் கூட இந்தியாவின் நேரடி வெளிநாட்டு முதலீடாக 84 பில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளதாம். சிங்கப்பூர் 90 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை பெற்றுள்ளதாக தரப்படுத்தல்கள் கூறுகின்றன. ஆனால் இலங்கையில் 0.5 வீத முதலீடே பதிவாகியுள்ளது.



இதற்கெல்லாம் அரசாங்கத்தின் மீது சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையில்லாத் தன்மையே காரணம். முதலீடுகள் என்ற பெயரில் அரச சொத்துகளின் பங்குகளை விற்கும் கொள்கையையே இன்று எமது ஆட்சியாளர்கள் கையாள்கின்றனர். இந்தச் செயற்பாடுகள் காரணமாக இன்று இலங்கையின் வங்கிக் கட்டமைப்பு மிகப்பெரிய அச்சுறுத்தலில் உள்ளது. வங்கிகளில் டொலர் பற்றாக்குறை மட்டுமல்ல, ரூபாயின் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. எமது வங்கிகள் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டு வருகின்றது. தரப்படுத்தல் நிறுவனங்கள் இலங்கையின் வங்கிகளை தரப்படுத்தலில் கீழ்நிலைப்படுத்தியுள்ளன. இது வங்கிக்கட்டமைப்பை பாரிய அளவில் பாதிக்கும். சர்வதேச நாடுகளும், தரப்படுத்தல்களும் எமக்கு அவசியம் இல்லையென நாம் கூறினாலும், சர்வதேசம் எம்மை அவ்வாறு பார்க்கப்போவதில்லை. தரப்படுத்தல் நிறுவனங்களின் சான்றுகளை வைத்தே சர்வதேசம் எம்முடன் கொடுக்கல் வாங்கல்களை செய்யப்போகின்றது. ஆகவே, இப்போதாவது சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதன் அவசியம் குறித்து சிந்தித்தாக வேண்டும். அதேபோல் நாட்டின் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். இது இரண்டுமே ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட காரணியாகும். நம்பிக்கையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் நாம் எவ்வாறு மீளப்போகின்றோம் என்பதை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் நாம் நாட்டிற்குள் செய்ய வேண்டிய அவசியமான வேலைத்திட்டங்கள், மனித உரிமைகளை, சட்ட சுயாதீனத்தை, ஐக்கியத்தை வெளிப்படுத்தி அதன் மூலமாக சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் மற்றும் நம்பிக்கை வைக்கும் விதமாக அபிவிருத்திகளை செய்ய முடியும் என்பதை காட்டியாக வேண்டும். குறிப்பாக ஊழல், கொள்ளை இல்லை என்பதை வெளிப்படுத்த வேண்டும்.
சர்வதேச நாணய நிதியம் பூச்சாண்டி அல்ல. 1950களில் இருந்தே சர்வதேச நாணய நிதியத்தை நாம் கையாண்டு வருகின்றோம். 1965 ஆம் ஆண்டளவில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து முதன் முதலில் கடன்களை பெற்றதில் இருந்து இன்றுவரை 16 தடவைகள் கடன்களை பெற்றுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் உள்ள பிரதான நாடுகளான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதிக்கம் இருப்பதால் திறந்த பொருளாதாரத்திற்கு செல்ல வேண்டும் என்ற அழுத்தம் கொடுப்பார்கள் மற்றும் வெவ்வேறு நிபந்தனைகளை முன்வைப்பார்கள் என பொதுவான கருத்தொன்று உருவாக்கப்பட்டுள்ளது. விலை நிர்ணயத்தை நீக்குதல், அரச வருமானத்தை அதிகரித்தல், அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்தல் என்ற நிபந்தனைகள் உள்ளன. அரசாங்கம் நாட்டின் அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்தி இருப்பை காட்டிக்கொண்டே இருக்க வேண்டும். இது ஒரு நாட்டிற்கு இருக்க வேண்டிய அவசியமான கொள்கை என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். உண்மையில் சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் நிபந்தனைகள் எமக்கு அவசியமான நிபந்தனைகளாகும். இப்போதுள்ள நெருக்கடியில் அவர்கள் விதிக்கும் நிபந்தனைகள் மிகவும் ஆரோக்கியமானதாகும். அதுமட்டும் அல்ல சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன்களை பெறும் வேளையில் நாமே வேலைத்திட்டத்தை முன்வைக்க முடியும். ஆனால் சர்வதேச நாணய நிதியம் குறித்து சரியாக விளங்கிக்கொள்ளாது முன்வைக்கும் விமர்சனங்களே மக்களிடத்தில் தெளிவின்மைக்கு காரணமாகும். சர்வதேச நாணய நிதியத்தை நாடாது போனாலும் கூட அவர்கள் எதனை கூறுவார்களோ அதனை இப்போதே நடைமுறைப்படுத்த ஆரம்பித்துவிட்டோம். ஆகவே இதனையே சர்வதேச நாணய நிதியமும் கூறப்போகின்ற காரணத்தினால் புதிதாக அச்சம் கொள்ளத்தேவையில்லை. ஆனால் இருக்கும் பிரச்சினை என்னவென்றால் இங்குள்ள குடும்ப ஆட்சி, சர்வாதிகார போக்கு, அடக்குமுறைகளை கைவிட்டே ஆகவேண்டும். ஆகவே அரசாங்கத்தில் இருந்துகொண்டு தீர்மானம் எடுக்கும் முக்கிய புள்ளிகள் நாட்டையும் மக்களையும் பற்றி சிந்திக்க முன்னர் அவர்களின் குடும்ப ஆட்சியை பற்றி சிந்திப்பதன் காரணமாகவும், தமக்கு பணம் சம்பாதிக்க வாய்ப்புகள் இல்லாது போகும் என்பதற்காகவுமே சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதை தவிர்த்துக்கொண்டுள்ளனர் என்ற பெரிய குற்றச்சாட்டு ஒன்றும் உள்ளது.
ஊழலில் நிறைந்து வழியும் ஒரு நாட்டில் எந்த முதலீடுகளை செய்தாலும் அந்நாடு அபிவிருத்தியடையப்போவதில்லை. நேரடி செலவை விட நாட்டில் மறைமுக செலவு நூறுக்கு 300 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இலங்கையின் நேரடி செலவு 100 சதவீதமாக இருந்தால் மறைமுக செலவுகள் 30 வீதமாக இருக்கவேண்டும். ஆனால் இலங்கையில் நூறுக்கு முன்னூறு வீதம் மறைமுக செலவு என்றால் கண்டிப்பாக இலங்கை ஊழலில் நிறைந்துள்ளது என்றே அர்த்தமாகும். இதனை நிறுத்தினாலே போதும் நாட்டை மீட்டெடுக்க முடியும். அதற்காக உருப்படியான ஆட்சியாளர்களை உருவாக்குவதில் தான் எமது எதிர்காலம் தங்கியுள்ளது.

---

## நமது எதிர்கால சந்ததியை

# இருட்டில் விடலாமா?

### அதிகரிக்கும் விறகுப் பயன்பாடும் காழிப்புகளும்



குந்தவி சிவபாலன்
(நான்காம் வருடம், ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)





இலங்கையின் இன்றைய ஸ்திரமற்ற பொருளாதாரத் தன்மையானது, சாதாரண பொது மக்கள் மத்தியிலேயே பெருமளவான தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.

அன்னியச் செலாவணி கையிருப்பின்மையால் இலங்கை, கடந்த காலங்களில் இருந்து பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. அதனடிப்படையில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் விலைவாசி, பொருட்களுக்கான தட்டுப்பாடு, கொவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்திய பொருளாதாரத் தாக்கம், எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, வேலை வாய்ப்பின்மைகள் எனப் பல விடயங்களைக் குறிப்பிடலாம்.

இவற்றில் சமீபத்தைய காலங்களில் பெரிய பிரச்சினையாக அமைவது, எரிவாயு தட்டுப்பாடும் அதனோடு தொடர்புடைய எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்களுமாகும். மக்கள் மத்தியில் அதீத பயத்தை உண்டுபண்ணிய நூற்றுக்கணக்கான எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன.

இதற்கு, அரச தரப்பிலிருந்து பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டு, வெடிப்புச் சம்பவகளைத் தடுக்கும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அவை குறைந்தபாடில்லை. எனவே, மக்கள் தாமாகவே எரிவாயுவைப் பயன்படுத்துவதில் இருந்து, மாற்றுவழிகளை கையாளத் தொடங்கியுள்ளனர்.

மண்ணெண்ணெய் அடுப்புகளின் பயன்பாடுகள், விறகு அடுப்புகள், மின்சார அடுப்புகள் எனப் பல மாற்று வழிமுறைகளின் பக்கம், மக்களின் கவனம் திரும்பியுள்ளது.

இலங்கையில் அதிகளவான மக்கள், நாளாந்த வருமானத்தை நம்பியிருப்பதால், தற்போதைய விலையேற்றப் பிரச்சினைகளால் பெருமளவானோர் விறகு அடுப்புகளைப் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. இது தற்போதைய நிலைமையைச் சமாளிப்பதற்குப் பயனுள்ளதாக இருந்தாலும் மறுபக்கம், இயற்கைக்கு முரணானதாக உணரப்படுகின்றது.

அண்மைக்காலமாக, விறகுப் பயன்பாடு அதிகரித்தமையால் காடழிப்பு அதிகரித்துக் கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் காடழிப்பு என்பது, காலா காலமாக இடம்பெற்று வருகின்றதும் தடுக்க முடியாததுமான ஒரு செயற்பாடாகும்.

இதுவரையில், இலங்கையில் பல்வேறு காரணங்களை மையப்படுத்தி, வில்பத்துப் பகுதியில் 100 ஏக்கருக்கும் அதிகமான பகுதியில் காடழிப்பு, சிங்கராஜ வனப்பகுதியில் பல ஏக்கர் காடழிப்பு, புத்தளம் ஆனைவிழுந்தான் பகுதியில் பல ஏக்கர் காடழிப்பு, புத்தளம் வண்ணாத்திவில் பகுதில் 100 ஏக்கருக்கும் அதிகமான பகுதி என்பன தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளன. ஹொரவப்பொத்தானை இயற்கை வனப் பிரதேசம் எரியூட்டி அழிக்கப்பட்டமை, முல்லைத்தீவுப் பிரதேசத்தில் இடம்பெறும் காடழிப்புகள் எனப் பல காடழிப்பு சம்பவங்கள் நாளாந்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நேரத்தில், எரிவாயு தட்டுப்பாட்டால் விறகு அடுப்பின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளமையானது, மென்மேலும் காடுகள் அழிக்கப்படுவதைத் துரிதப்படுத்தும்.

அண்மையில், மிகப் பிரபலமாக சமூக வலைத்தளங்களில் பேசப்பட்ட ஒரு விடயம், பிரபல பல்பொருள் அங்காடியில் விறகுக் கட்டுகள் விற்பனைக்காக அடுக்கி வைக்கப்பட்டமையாகும். அதேவேளை சில இணையத்தளங்களில் ஒன்லைனில் விறகுகள் விற்பனைக்காக விளம்பரப்படுத்தப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த இரண்டு விடயங்களையும் எடுத்து நோக்கும் போது, இலங்கையில் விறகுக்கான கேள்வி எவ்வாறானதொரு நிலையில் இருக்கின்றது என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது.

இவற்றை எல்லாம் தாண்டி, கொழும்பின் பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில், எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டால் விறகு கொண்டு சமையல் செய்யப்படுகின்ற புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தன. அவ்வாறானதொரு நட்சத்திர ஹோட்டலுக்கான விறகின் தேவை எவ்வளவாக இருக்கும், அதற்கான விறகுகள் எங்கிருந்து பெறப்படுகின்றன? போன்ற கேள்விகளுக்கு விடையாக அமைவது இலங்கையின் காடழிப்பு சட்டவிரோத செயற்பாடுகள் மாத்திரமே!

சாதாரணமாக, கிராமிய வாழ்க்கை முறையில் விறகுக்கான தேவை எப்பொழுதுமே அதிகமானதாக இருக்கின்றது. ஆனால், இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியுடன் கூடிய நவீன உலகில், விறகுக்கான கேள்வி இணைய அளவிலும், பல்பொருள் அங்காடிகளிலும் அதிகரித்து வருகின்றமை ஆச்சரியமானதாகும்.


விறகுத் தேவை அதிகரிப்பால், இயற்கை சமநிலை வட்டத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இலங்கையில் மேற்கொள்ளப்படும் முறையற்ற அபிவிருத்திப் பணிகளால், சிங்கராஜவனம் உட்பட 39 தேசிய அடர்ந்த காடுகள் அழிவுக்கு உட்படும் அபாயத்தை எதிர்நோக்கி உள்ளதாக, சூழலியல் கற்கைகள் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பொருட்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒவ்வொருவரின் எதிர்காலத்தையும் பாதித்த வண்ணம் உள்ளது. அந்தவகையில், எரிவாயு பிரச்சினைகளால் அதிகரித்த விறகுப் பயன்பாடுகள் காடழிப்பை ஊக்குவிக்கும் செயற்பாடாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு, இன்னும் எரிவாயுத் தட்டுப்பாடு அதிகரிக்கின்ற வேளையில், அனைத்து மக்களும் பயன்படுத்த வேண்டிய விறகைத் தேசிய வனங்களிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். அவ்வாறான சந்தர்ப்பத்தில், சட்டரீதியாகவோ, சட்டரீதியின்றியோ விறகுக்காக மரங்கள் வெட்டப்படுதல் என்கின்ற போர்வையில், காடழிப்பு அதிகரிக்க வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகின்றன. காடழிப்புகள் அதிகரிக்கின்ற போது, அவற்றால் ஏற்படும் பாதகமான விளைவுகள் நாம் அனைவரும் அறிந்தவையே.

சிறுசிறு கிராம மட்டத்திலிருந்துதான் படிப்படியாகக் காடழிப்புகள் ஆரம்பமாகின்றன. சாதாரணமாக வீடுகளில் நாளாந்த விறகுப் பயன்பாட்டு அளவை விடவும், பெரிய நட்சத்திர ஹோட்டல்களின் விறகுத் தேவையானது அதிகமாகும். இவை, ஒரு கட்டத்தில், பாரிய வியாபார அடித்தளத்தை உருவாக்கும். அப்போது, காடழிப்புகளை எம்மால்த் தடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுவோம் எனச் சுற்றுச் சூழலியல் ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

எனவே, ஒவ்வொருவரும் இயற்கையைப் பாதுகாக்கும் எண்ணத்தோடு, எங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். எல்லோரும் தங்களால் முடிந்த அளவு, மரங்களை நட்டு சிறியசிறிய காடுகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் இயற்கைச் சமநிலை சீராகப் பேணப்படும். இல்லையேல் அதன் பாரதூரமான பின்விளைவுகளை நாம் அல்ல; நமது எதிர்கால சந்ததி அனுபவித்தே ஆகவேண்டியிருக்கும்.







கிளிநொச்சியில் அதிகரிக்கும் குற்றச்செயல்களுக்கு காரணங்கள்:

# போதையின் பாதையில் பயணம்



சுப்பிரமணியம் பாஸ்கரன்









வடக்கில் அதிகரித்துச் செல்லுகின்ற போதைப்பொருள் பாவனைகளால் கொலைகள், தற்கொலைகள், வன்முறைகள், கொள்ளைச் சம்பவங்கள் என நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன, என்பதுடன் இளம் சமுதாயம் அழிவுப் பாதையை நோக்கி செல்வதாகவே அமைகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களில் அதிகரித்துச் செல்லும் குற்றச் செயல்கள், கொலைகள், வீதி விபத்துகள் இதற்குத் தக்க ஆதாரங்களாகின்றன.

கிளிநொச்சியில் டிசெம்பர் மாதம் 26ஆம், 27ஆம் திகதி, இரண்டு கொலைச் சம்பவங்களும் புத்தாண்டு தினத்தில் ஒரு கொலைச் சம்பவமும் ஆக ஒருவாரத்துக்குள் மூன்று கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன.

அதாவது, பூநகரி, கௌதாரி முனைப் பகுதியில் உள்ள சுற்றுலா தளத்தில் ஞாயிறு விடுமுறையை கழிப்பதற்காக வந்த இரண்டு குழுக்களுக்குகிடையில் மது போதை காரணமாக ஏற்பட்ட மோதலின் போது, கத்தியால் குத்தி இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இதேநேரம், மறுநாளில் இலண்டனிலிருந்து இலங்கைக்கு வந்து கிளிநொச்சி, உதயநகரில் வசித்து வந்த 67 வயதுடைய மூதாட்டி ஒருவரும், வெட்டி படுகொலை செய்யப்பட்டு, அவரது சடலம் சுமார் 18 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால், ஆற்றில் போடப்பட்டிருந்ததுடன் போதைப் பொருள் வாங்க பணம் தேவை என்பதற்காக குறித்த பெண்ணை கொலை செய்தாக சந்தேக நபர் பொலிஸ் விசாரணைகளில் தெரிவித்திருந்தார். புத்தாண்டு தினத்தின் இரவு, மது போதையில் பரந்தன் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதேபோன்று, கடந்த ஆண்டுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற வீதி விபத்துகளிலும் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தி விபத்துக்குள்ளாகி உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகளவில் காணப்படுகின்றன.

இவ்வாறு குறைந்தளவு மக்கள் தொகை கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில், போதைப்பொருள் பாவனையும் அதனால் ஏற்படும் வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துச் செல்வதாகவே பலரும் குறிப்பிடுகின்றனர்.

இளம் சமூகத்தினர் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதற்கு அவர்களது குடும்ப பின்னணிகளும் காரணமாக அமைந்து விடுகின்றன. அதாவது, குடும்ப வன்முறைகள், குடும்ப பிரிவுகள், தாய், தந்தை ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் என்பவற்றால் சிறுவயதில் இருந்தே அவர்களுக்கு சரியான அன்பும் அரவணைப்பும் கிடைக்காதன் விளைவுகள் இளம் சமூகத்தினரை போதைப்பொருள் அடிமை நிலைக்குத் தள்ளிவிடுகின்றன.

போதைப்பொருள் பாவனை என்பது, நாடளாவிய ரீதியில் மோசமாக அதிகரித்து வரும் நிலையில் அதையும் கட்டுப்படுத்துவதற்காக

> **குறைந்தளவு மக்கள் தொகை கொண்ட கிளிநொச்சியில் போதைப்பொருள் பாவனையும் வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துச் செல்கின்றன**

கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்ற போதும் அதன் பாவனை அதிகரித்தவண்ணமுள்ளது.

உலகளாவிய ரீதியிலே 15 தொடக்கம் 64 வயதுக்குட்பட்ட 243 மில்லியன் மக்கள் போதைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களில் 80 சதவீதமான ஆண்களும் 20 சதவீதமான பெண்களும் அடங்குகின்றனர்.



அதே நேரம், ஐக்கிய நாடுகள் சபையால் அன்மைக்காலத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் மூன்று வருடத்தில் ஆறு இலட்சம் பேர் போதைவஸ்துக்கு அடிமையாகி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் உலகம் முழுவதும் சுமார் 200 மில்லியன் பேர் போதைப்பொருள் பாவிப்பவர்களாக உள்ளார்கள் என்று ஐ.நா அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டு ஐ.நா பொதுச்சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, ஒவ்வொரு வருடமும் ஜூன் 26ஆம் திகதி போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது.

மக்கள் சமுதாயத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் எதிராக உலகளாகிய ரீதியில் எழுந்திருக்கும் பிரச்சினைதான் இந்தப் போதைப்பொருள் பாவனை.

போதைப் பொருட்களால் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன.

உலக சனத்தொகையில் சுமார் நூறு கோடிபேர் புகைப்பழக்கத்திற்கு பழக்கபட்டுள்ளனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 30 விகித மக்களும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 50 விகித மக்களும் புகைப்பிடித்தலில் ஈடுபடுகின்றனர்.



தினமும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 22 சதவிகிதமும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 0.9 விகிதமும் என சுமார் 250 மில்லியன் பெண்கள் புகைப்பிடித்தலில் ஈடுபடுகின்றனர் என ஆய்வுகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது

இத்தகைய போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து, அலுவலக வேலை, நட்பு, உறவினர்கள் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரிசல் ஏற்படுவதுடன் சமூகத்திலிருந்தும் ஒதுங்கி கொள்கின்றனர். இவ்வாறு போதைக்கு அடிமையாகி இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து விடுகின்றது. குழந்தைகளுக்கு கிடைக்க வேண்டிய அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாக மாறிவிடுகின்றது.

எனவே இவற்றை சட்டத்தினால் அல்லது தண்டனைகளால் மட்டும் கட்டுப்படுத்தி விட முடியாது. போதைப் பொருள் பாவனை தொடர்பாக சமூகத்தில் ஏற்படுகின்ற விழிப்புணர்வுகள் மூலமே ஓர் எதிர்கால சமூகத்தை பாதுகாத்துக் கொள்ளமுடியும்.





# 'ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு'



க. சரவணன்

விடுமுறையில் வீடு செல்வதற்கு, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அனுமதி மறுத்ததால், துப்பாக்கி சூட்டை நடத்தி, நான்கு பொலிஸாரைச் சுட்டு கொலை செய்த பொலிஸ் சாஜன்டுடன் தொடர்புடைய சம்பவத்தை, வெறுமனே விடுமுறை வழங்காததால் ஏற்பட்ட ஆத்திர உணர்வால் விளைந்த சம்பவம் எனக் கடந்து சென்றுவிட முடியாது.

டிசெம்பர் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு, திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சாஜன்ட், பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோகம் செய்த சம்பவம், பொலிஸாரை மட்டுமல்ல மக்களிடத்திலும் பயப் பீதியை ஏற்படுத்தியுள்ளதுடன், பொலிஸாருக்கு அவப்பெயரையும் ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்புத் துறையில் இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றிருந்தாலும், தன்னுடன் கடமையாற்றி வந்த சகநண்பர்களான நான்கு பொலிஸாரை, பொலிஸார் ஒருவர் சுட்டுக் கொலை செய்துள்ளமை, இலங்கை பொலிஸ் வரலாற்றில் முதன்மையான ஒரு துயரமான சம்பவமாகும்.

திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் 54 பொலிஸார் கடமையாற்றி வருகின்றனர். இந்தநிலையில், பொலிஸ் சேவையில் 22 வருட காலமாகச் சேவையாற்றிவரும் சியம்பலாண்டுவ அத்திமலை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 38 வயதுடைய வனிங்க முதியான்சிலாகே ரவீந்து குமார என்ற பொலிஸ் சாஜன்ட், திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றி வருகின்றார்.

இவர், தான் விடுமுறையில் வீடு போவதற்கு, அப்போது பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியாக இருந்த அதிகாரியிடம் அனுமதி கோரியுள்ளார். அதற்கு அந்த அதிகாரி, பொலிஸ் பொறுப்பதிகாரி தற்சமயம் விடுமுறையில் உள்ளதால், உனது பிரிவான போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியிடம் அனுமதி பெற்றுவருமாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து, போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியிடம் விடுமுறைக்காக அனுமதி கோரிய போது, போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றிவரும் பொலிஸார் விடுமுறையில் சென்றுள்ளதால், அவர்கள் கடமைக்கு திரும்பியதும் விடுமுறையில் செல்லமுடியும் என்று கூறியுள்ளார்.

திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி 23ஆம் திகதி விடுமுறையில் இருந்து கடமைக்குத் திரும்பிய நிலையில், பதில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த அதிகாரி, விடுமுறையில் வீடு சென்றுள்ளார். இவ்வாறான நிலையில், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் பொலிஸ் சாஜன்ட் விடுமுறை கோரியுள்ளார். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சம்பவதினமான 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை, பகல் கடமையில் ஈடுபட்ட பொலிஸார், தமது கடமைகளை மாலை ஆறு மணிக்கு முடிந்த பின்னர், வீடுகளுக்குச் சென்றுள்ள நிலையில், இரவு கடமையைப் பொறுப்பேற்ற பொலிஸார் திருக்கோவில் பிரதேச தேவாலயங்களுக்கு பாதுகாப்பு கடமைக்காக சென்றார்கள். இச்சந்தர்ப்பத்தில், பொலிஸ் நிலையத்தில் ஐந்து பொலிஸார் மற்றும் விடுதிகளில் தங்கியிருக்கும் பொலிஸார் மாத்திரமே இருந்துள்ளனர்.

அதேவேளை, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவரது ஜீப் வண்டியில் சாரதியுடன் தேவாலயங்களில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருபவர்களை கண்காணிப்பதற்காக 'ரவுன்ட்' போயிருந்த நிலையில், அப்போது அவருக்கு காஞ்சரம் குடா பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய, ஜீப்வண்டியை விட்டு இறங்கி, சாரதியை ஜீப்வண்டியுடன் பொலிஸ் நிலையத்துக்கு போகுமாறு தெரிவித்துவிட்டு, மோட்டார் சைக்கிளில் காஞ்சரம்குடா நோக்கிச் சென்றார்.

இரவு 11 மணியளவில், பகல் கடமையை முடித்துவிட்டு இருந்துள்ள பொலிஸ் சாஜன்ட் குமார, திடீரென பொலிஸ் நிலைய வாசலில் கடமையில் இருந்த பொலிஸார் ஒருவரின் துப்பாக்கியைப் பறித்து, ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளார். அதைத் தொடர்ந்து, அவரை நோக்கிச் சுட்டபோது, அவர் அங்கிருந்து தப்பி ஓடி ஒளிந்து கொண்டார்.

இதன் போது, பொலிஸ் நிலையத்துக்குள் கடமையில் இருந்தவர்கள் மீது, பொலிஸ் சாஜன்ட் துப்பாக்கிதாரி திடீரென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்து பொலிஸ் சாஜன்ட் காதர், பொலிஸ் கான்ஸ்டபிள் புரபுத்த படுகாயமடைந்தனர்.

இதனை தொடர்ந்து, பொலிஸ் நிலைய கட்டடத்தில் ஆயுத களஞ்சியசாலை பூட்டை, துப்பாக்கியால் வெடிவைத்து உடைத்து, அங்கிருந்து ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் கொண்ட 30க்கு மேற்பட்ட மகசீன்களை எடுத்துக்கொண்டு, அங்கிருந்து வெளியேறி, பொலிஸ் நிலைய பகுதியில் இருந்துள்ளார்.

இந்த நேரத்தில், நடந்த சம்பவம் எதுவும் தெரியாத



நிலையில், பொலிஸ் நிலையத்துக்குள் பொலிஸ் சாரதி துஸரா, ஜீப்வண்டியுடன் உள்நுழைந்தபோது, ஜீப் மீது துப்பாக்கிதாரி சரமாரியாகத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டார். சாரதி படுகாயமடைந்ததை அடுத்து, ஜீப் அங்கிருந்த கட்டடத்துடன் மோதி நின்றுள்ளது.

மோட்டர் சைக்கிளில் காஞ்சரம்குடாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அலைபேசியில் பொலிஸ் நிலையத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, அவர் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பினர்.

அப்போது, அவர்களுக்கு இங்கு நடந்த சம்பவம் எதுவும் தெரியாத நிலையில், நிலையத்துக்குள் சென்ற போது, அங்கு ஜீப் வண்டி கட்டடத்துடன் மோதிய நிலையில், ஜீப்பின் லைற் எரிந்து கொண்டிருப்பதை கண்டு, அங்கு சென்ற போது பொலிஸ் பொறுப்பதிகாரியை நோக்கி, துப்பாக்கிதாரி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் அவர் படுகாயமடைந்தார். அவருடன் நின்றிருந்த அனைவரும் உடனடியாக கீழே வீழ்ந்து படுத்துக் கொண்டனர்.

இருந்தபோதும், சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை துப்பாக்கிதாரி மேற்கொண்டிருந்தான். அவனை நோக்கி, துப்பாக்கி பிரயோகம் செய்வதற்கு இவர்களிடம் ஒரு துப்பாக்கிகூட கையில் இல்லாத நிலையில், பொலிஸ் பொறுப்பதிகாரி மற்ற பொலிஸ் உத்தியோகத்தரிடம் மின்சாரத்தை அணைக்குமாறு தெரிவித்த போது, அதனை அணைப்பதற்கு பொலிஸ் சாரதியான குமார தலைக்கவசத்துடன் எழுந்தபோது, அவர் மீது மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகம், அவரின் தலைக்கவத்தை ஊடறுத்துச் சென்றதுடன் அவருக்கு தலையில் எதுவித பாதிப்பும் ஏற்படாத நிலையில், அவரும் படுகாயமடைந்ததுடன் மின்சாரம் துண்டிக்கப்பட்டதை அடுத்து அங்கு இருள் சூழ்ந்தது.

அங்கிருந்து கைத்துப்பாக்கி ஒன்றை எடுத்த பொலிஸ் பொறுப்பதிகாரி, துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுவரும் துப்பாக்கிதாரி பக்கம் துப்பாக்கி சூடு நடத்தினார். அப்போது அதற்குப் பதிலாக துப்பாக்கிதாரியும் அவர்களை நோக்கிச் சுட்டான். இவ்வாறு சுமார் 10 நிமிட துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ள நிலையில், பொலிஸ் பொறுப்பதிகாரி துப்பாக்கி சூட்டை நிறுத்திவிட்டு, உயர் அதிகாரிகள், அக்கரைப்பற்று பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

இதனையடுத்து, சுமார் 20 நிமிடத்தில் அக்கரைப்பற்று பொலிஸார் அங்கு வந்து, படுகாயமடைந்தவர்களை அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். இந்த நிலையில், துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ் சாஜன்ட் தனது சொந்த ஜீப்பில், (ஏற்கெனவே பொலிஸ் நிலையத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்தது) அங்கிருந்து தனது உடைகளுடனான பாக்கையும் துப்பாக்கி ரவைகள் கொண்ட சுமார் 19 மகசீன்களையும் இரு துப்பாக்கிகளையும் எடுத்துக் கொண்டு, அங்கிருந்து தப்பித்தார்.

தனது வீடான அத்திமலைக்கு சென்று, தாயாரிடம் தனக்கு லீவு தராததால் இவ்வாறு செய்ததாக தெரிவித்து விட்டு, அத்திமலை பொலிஸ் நிலையத்தில் துப்பாக்கிகளுடன் சரணடைந்தான்.

இந்தச் சூட்டு சம்பவத்தில் பொலிஸ் சாரதியான சியம்பலாண்டுவையைச் சேர்ந்த திஸநாயக்க முதியான்சாலாக துஸரா, பொலிஸ் கான்ஸ்டபிள்களான பாண்டிருப்பைச் சேர்ந்த அழகுரத்தினம் நவீன், பிபிலையைச் சேர்ந்த சலகா பண்டாரநாயக்க இஸரா, ஒலுவிலைச் சேர்ந்த 53 வயதுடைய பொலிஸ் சாஜன்ட் கலந்தர் லெப்பை அப்துல் காதர் ஆகிய நான்கு பேர் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட மூன்று பேரில் இருவர் சிகிச்சை பெற்று வைத்திசாலையில் இருந்து வெளியேறியதுடன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் இடது பக்க தோள் பட்டை ஊடாகக் குண்டு பாய்ந்ததில், அவரின் கை இயங்காத நிலையை அடைந்துள்ளதுடன் அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இதேவேளை, திருக்கோவில் பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸ் மா அதிபர் விஜயம் ஒன்றை 26 திகதி மேற்கொண்டு சம்பவம் தொடர்பாக ஆராயந்ததுடன் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசேட விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு, 15 நாள்களுக்குள் விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டுள்ளார்.







UK Newspapers Online Community



# தும்புத் துறையின் துயரங்கள்



ரஸீன் ரஸ்மின்

இலங்கையில் தும்புத் தொழிலுக்கு நீண்ட வரலாறு இருக்கிறது. 19ஆம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தொழில் தும்பு உற்பத்தி முறைமையும், உலக தும்புச் சந்தையில் இலங்கையை ஒரு முக்கிய தும்பு உற்பத்தி நாடாக நிலைநிறுத்தியுள்ளது.

11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அராபிய புவியியலாளரான முஹம்மது அல்-இட்ரிசி, தென்னந்தும்பிலிருந்து தயாரிக்கப்பட்ட கப்பல் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நூல் கயிறுகளின் தொகுதி பற்றியும் இதற்கான மூலப்பொருளான தென்னந்தும்பைப் பெறுவதற்கு ஓமான், யெமென் நாட்டைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர் என குறிப்பிட்டுள்ளார்.

தென்னைப் பயிர்ச்செய்கையானது மேற்கத்திய காலனித்துவத்துடன் பாரிய பொருளாதார உருமாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. பிரித்தானியர் ஆட்சியின்போது பெருந்தோட்ட உற்பத்திப் பொருளாதார மையமாக இலங்கையின் மலைநாடே காணப்பட்டது.

அத்துடன், பிரித்தானியர் தென்னையை ஒரு முதன்மையான பெருந்தோட்டப் பயிராகக் கருதவில்லை. ஆயினும், இந்நிலப்பகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 1840 - 60 காலப்பகுதியில் பெரும் தென்னந்தோட்டங்கள் அமைக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டனர்.

இலங்கையின் கரையோர நிலப்பகுதியிலும், குறிப்பாக கிழக்கிலுள்ள மட்டக்களப்பிலும் வடக்கிலுள்ள யாழ்ப்பாணத்திலும் வடமேற்கிலுள்ள புத்தளம், சிலாபத்திலும் தென்னந்தோட்டங்கள் அமைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து முதலாளித்துவ பெருந்தோட்ட பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பெருந்தொழில் தும்பு உற்பத்தியும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி பிரதேச சபைக்கு உட்பட்ட மதுரங்குளி, விருதோடை, புழுதிவயல், கணமூலை, கடையாமோட்டை, நல்லாந்தொழுவ, கரம்பை உள்ளிட்ட பகுதிகள் துப்புத் தொழிலுக்கு பெயர் பெற்றுள்ளன.

சுமார் 20 வருடங்களுக்கும் மேல் இந்த மக்கள் இந்தத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இங்கு சுமார் 200 இற்கும் மேற்பட்ட தும்புத் தொழிற்சாலைகள் காணப்படுகிறன.

வெயில் காலங்களில் மட்டும்தான் தும்பு உற்பத்தி செய்ய முடிவதாகவும் உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். அத்துடன், வெயில் காலங்களில் தும்புக்கான விலை குறைவடைவதுடன், மழை காலங்களில் அதன் விலை



அதிகரிப்பது வழமையாக காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

இங்கிருந்து உற்பத்தி செய்யப்படும் தும்பு , தும்புச் சோறு, தும்புக் கழிவுத்தூள்கள் என்பன வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறன. இலங்கையின் தும்பு உற்பத்தி வெளிநாடுகளில் நல்ல கிராக்கி காணப்படுவதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனா, ரஷ்யா, சவுதி அரேபியா, ஓமான், கொரியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கையின் தும்பு உற்பத்தி பொருட்களை ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகிறன என இலங்கை தும்பு ஏற்றுமதியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பலகைகள், சொகுசு மெத்தைகள், வாகன இருக்கைகள் , தற்காலிக வீடுகள், அலங்கார பொருட்கள், விரிப்புகள், மணல் அற்ற விவசாய நடவடிக்கைகளுக்காகவும் இலங்கையிலிருந்து தும்பு, தும்புச் சோறு, தும்பு கழிவுத்தூள் என்பன ஏற்றுமதி செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

எனினும், குறித்த தும்பு ஏற்றுமதிக்கான நிர்ணய விலை ஒன்று இல்லாமை காரணமாகத் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தும்பு உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்னர் அதிக விலைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தும்பு தற்போது குறைந்த விலைக்கு வெளிநாட்டவர்கள் கொள்வனவு செய்வதால், தாங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். இதனால், தங்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் தொழிலாளர்களுக்கு உரிய முறையில் சம்பளத்தை வழங்க முடியாத நிலையும் காணப்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

தேங்காய் மட்டைகளை இயந்திர மூலம் துண்டாக்குதல், தும்பாக்கிய பின் சுத்திகரிப்புச் செய்தல், பொதியிடல் என பல படிமுறைகளை மேற்கொண்டு கஷ்டப்பட்டு தும்பு உற்பத்தி செய்யும் போது, எமது உற்பத்தி பொருட்களுக்கு வெளிநாடுகளில் வாழ்வோர் விலைகளை நிர்ணயிக்கும் அவல நிலை காணப்படுவதாக மதுரங்குளி தும்பு ஏற்றுமதியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனினும் கடன்களைப் பெற்று இந்தத் தும்புத் தொழிற்சாலைகளை முன்னெடுத்து வருவதால், அதிக இலாபம் கிடைக்காவிட்டாலும், குறைந்த இலாபத்துக்காகப் பெற்ற கடன்களையாவது திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நோக்கில் வெளிநாட்டவர்கள் கேட்கும் விலைக்கு தும்பு ஏற்றுமதி செய்வதாக மதுரங்குளி தும்பு ஏற்றுமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு சரியான விலை நிர்ணயம் இன்மையால், தும்பு ஏற்றுமதி செய்யும் தாங்கள் தொடர்ந்தும் கடனாளிகளாக மாறிக்கொண்டே செல்வதுடன், தங்களிடம் குறைந்த விலைக்கு தும்புகளை கொள்வனவு செய்து கூடிய விலைக்கு விற்பனை செய்யும் வெளிநாட்டு நிறுவனங்கள் கூடுதலாக பணம் சம்பாதிக்கின்றனர் எனவும் தும்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்கள் கூறுகின்றார்கள்.

கற்பிட்டி பிரதேச சபையின் கடையாமோட்டை உப அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் தும்பு தொழிற்சாலைகள் அமையப் பெற்றுள்ளதால் அந்த பகுதியில் சூழல் மாசடைவதும் தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகிறது.

இந்த பகுதியில் உள்ள நீர் முழுதும் நிறம் மாறி மாசடைந்துள்ளன. அதுமட்டுமன்றி, இந்தப் பகுதிகள் தும்புத் தூசிகளால் புகை மண்டலமாக காட்சியளிக்கின்றன. இதனால் , இங்குள்ளவர்களும் அந்தப் பகுதிகள் ஊடாக போக்குவரத்து செய்வோரும் நோயாளிகளாக மாறும் நிலையும் காணப்படுகிறது.

எனினும், இந்தப் பகுதியில் உள்ள மக்கள் பெரும்பாலானோர் தும்பு தொழிற்சாலையையே தமது ஜீவனோபாய தொழிலாக மேற்கொள்வதால், மக்கள் குடியிருப்புகள் அமைந்துள்ள தும்பு தொழிற்சாலைகளை ஒதுக்குப்புறமான இடங்களை அடையாளப்படுத்தி அமைத்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அதுமாத்திரமின்றி, இங்கு உற்பத்தி செய்யப்படும் தும்புகளை கொள்வனவு செய்ய நிறுவனம் ஒன்றை நிறுவுமாறும், சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து அதற்கான நிர்ணய விலையையும் பெற்றுக் கொடுக்குமாறும் தும்பு உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கையின் அன்னிய செலாவணிக்கு தும்பு உற்பத்தி பெரும் பங்களிப்பு செய்துவரும் நிலையில், இந்த் தும்புத் தொழிற்சாலையை நம்பி வாழும் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், தொழிலாளர்கள் என இதன் மூலம் பயன் பெற்றுவருவோர் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்த மக்களின் ஒரே எதிர்பார்ப்பாகும்.



LK News Viber Community

# சல்லி கிராமமும் சலிக்கும் மீனவர்களும்



அ. அச்சுதன்



சல்லி ஆற்றங்கரை, சல்லி கடற்கரை கடலின் நடுவே காணப்படும் சிறு குன்றுகள், உட்பட இன்னும் பல அம்சங்கள் சல்லி கிராமத்துக்குச் சிறப்பு சேர்க்கின்றன. சல்லி கிராமம் நான்கு வட்டாரங்களைக் கொண்டுள்ளது. மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, இரண்டு மீனவர் சங்கங்கள் சல்லி கிராமத்தில் இயங்குகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை நகரிலிருந்து 11 கிலோ மீற்றர் தூரத்தில் சல்லி கிராமம் இருக்கின்றது. சாம்பல் தீவு பிரதான வீதி ஊடாகச் சென்று, கிழக்கே பிரிந்து செல்லும் மாங்கிணாய் சல்லி வீதி வழியாகச் சென்றால் சல்லி கிராமத்தை சென்றடைய முடியும்.


இக்கிராமத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க முத்துமாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. 250 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சின்னத்தம்பி என்பவருக்கு அம்பாள் காட்சி கொடுத்து, இந்த ஊரின் நன்மைக்காக இவ்விடத்தில் தன்னை ஆதரிக்கும்படி அருள் வாக்குக் கொடுத்தாளாம். இவ்வூரில் வாழ்கின்ற சைவ மக்களின் சுபீட்சத்துக்காகவும் கடற்தொழில் செய்பவர்களின் வழிபாட்டுக்காகவும் சின்னத்தம்பி என்பவர் அம்பாளை வைத்து வழிபட்டு வந்ததாகவும் வரலாறு குறிப்பிடுகின்றது. இன்று இக் கோவில் ஈழத்தில் மிகவும் சிறப்புற்று விளங்குகின்றது.

ஆண்டா குளத்தில் உற்பத்தியாகும் செம்பியன் ஆறு, சல்லி முத்துமாரியம்மன் கோவிலுக்கருகே ஓடிச் சென்று திருகோணமலைக் கடலில் சங்கமமாகின்றது. சங்கமமாகும் இடத்திலுள்ள வெள்ளை மலைக் குன்றில் கோவில் காணப்படுகின்றது. கிழக்கு நோக்கிய வாசலையுடையதாய், கடற்கரை ஓரமாகக் கோணேசர் கோவிலைப் பார்த்த வண்ணம், இக் கோயில் அமைந்திருக்கின்றமையும் சிறப்புத்தான் .

கடல் வழியாக இக் கோவில் கோணேசர் கோவிலில் இருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கின்றது. இரவில் கோணேசர் கோவிலில் ஏற்றப்படும் தீபத்தை இவ்வாலயத்திலிருந்து தரிசிக்கலாம். இத்தனை சிறப்புகள் நிறைந்த சல்லி கிராமத்தில் மீனவர்கள் தமது தொழிலைப் பல்வேறு தடைகளைத் தாண்டி மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

சல்லி முத்துமாரியம்மன் கோவிலின் தலைவரும், மலைமகள் மீனவர் சங்கத்தின் தலைவருமான தங்கவேலாயுதம் காந்தரூபன், கிராமத்தின் சாட்சியாக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கிராமத்தின் இன்றைய நிலைமை குறித்தும் கருத்துத் தெரிவித்தார்.





"எமது கிராமம் நீண்ட வரலாற்றை கொண்ட கிராமம். பிரதான தொழிலாக கடற்தொழில் காணப்படுகின்றது. எமது மீனவர்கள் மீன் வளத்தை பாதுகாக்கின்றனர். ஆனால், அயல் கிராமங்களை சேர்ந்த குறிப்பாக இறக்கக் கண்டி, நிலாவெளி பகுதியில் உள்ள மீனவர்கள், இப்பகுதியில் வந்து மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். தடை செய்யப்பட்ட சட்ட விரோத சுருக்கு வலைகளைப் பயன்படுத்துகின்றனர். ஆற்று களப்பு பகுதியில் இறால் உற்பத்தி மிகவும் அதிகம்.

தடை செய்யப்பட்ட கூட்டு வலைகளைப் பயன்படுத்தி இறால் பிடிக்கின்றனர். இதனால் எமது கிராமத்தில் உள்ள மீனவர்களின் தொழில் பாதிப்படைவதுடன் சந்தை வாய்ப்பும் குறைவடைகின்றது; மீன் வளமும் அழிக்கப்படுகின்றது. இச் செயற்பாட்டை கடற்படையினர் கண்டும் காணாமல் இருக்கின்றனர்"

"சல்லி கிராமத்தில் சுமார் 170 இற்கும் மேற்பட்ட இயந்திரப்படகுகள் கடற்தொழிலில் ஈடுபடுகின்றன. ஆனால், இறங்குதுறை வசதிகள் இங்கு இல்லை. இங்குள்ள பறங்கித்துறை இறங்குதுறை புனரமைக்கப்படவில்லை. இத்துறையில் சுமார் 80 படகுகளை நிறுத்தக்கூடிய இடவசதிகள் காணப்படுகின்றது. ஆனால், இதுவரை எவ்வித அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு நாளும் கல்லுகளில் அடிபட்டு படகுகள் சேதம் அடைகின்றன. இதனால் மீனவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிப்பு அடைகின்றனர்.

"அண்மையில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ்விடத்தை பார்வையிட்டு இறங்குதுறை வசதிகளை ஏற்படுத்துவதாக மீனவர்கள் மத்தியில் வாக்குறுதி அளித்தார். இருந்தபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை" என மீனவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

சல்லி கிராமம் கடல் அரிப்புக்கு உட்பட்டு வரும் ஒரு கிராமம். ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்டளவு நிலப்பகுதியை இழந்து வருகின்றது. சல்லி முத்துமாரியம்மன் கோவிலுக்கு முன்பாக சுமார் 150 மீற்றர் வரை கருங்கற்களால் பாதுகாப்புச்சுவர் அமைக்கப்பட்ட போதும் ஏனைய பகுதிகளில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்படவில்லை. கடல் அரிப்பிலிருந்து இக்கிராமத்தை பாதுகாக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இயற்கையின் காட்சிகள் பூரணமாகக் கொட்டிக்கிடக்கும் இக் கிராமத்தில் சுற்றுலாத்துறைக்கு வாய்ப்பான பகுதியாகவும் அமைகின்றது. இச் செயற்திட்டத்துக்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு இக் கிராமத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அரச அதிகாரிகளை நோக்கி இப்பகுதி மக்கள் முன்வைக்கின்றனர்.

குறிப்பாக, இங்குள்ள வைத்தியசாலை பெயரளவில் இயங்குவதாகவும் நோயாளிகளுக்குத் தேவையான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் இப்பகுதி மக்கள் முன்வைக்கின்றனர். எனவே, இவ்விடயங்களில் அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?





# பிரச்சினைகளை இருட்டில் சமாளிப்பது அரசாங்கத்தின் பொறுப்பல்ல

பாடசாலைகளில் காலைநேரக் கூட்டத்தின் போது, வரிசையாக நிற்கவேண்டும். அங்கு ஆரம்பித்த வரிசை, வெளியிடங்களிலும் இன்னும் காணக்கிடக்கிறது; நீண்டுகொண்டே செல்கின்றது.

பாடசாலைகளில் கற்பித்தலுக்கு அப்பால், இன்னோரன்ன செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில், பிரதானமானது ஒழுக்கமாகும். அவ்வொழுக்கம் ரயில் பெட்டிகளைப் போல் நீண்டதாய் நிற்கும் வரிசைகளில் கடைப்பிடிப்பதை இட்டு கொஞ்சம் பெருமைப்படவேண்டும்.

ஒவ்வொன்றுக்காகவும் வரிசையில் நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் எந்தவொரு நெருக்கடிக்கும் முதலாவது பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். நெருக்கடியைப் புறக்கணித்து, இருட்டில் சமாளிப்பது பொறுப்பல்ல.

சமையல் எரிவாயு விவகாரத்தில் அரசாங்கம் நடந்துகொள்ளும் முறை சந்தேகத்துக்குரியது. குற்றப்புலனாய்வுப் பிரிவில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு இன்னும் காஸ் நிறுவனத்துக்குப் பொறுப்பானவர் வாக்குமூலமளிக்கவில்லை. ஆதலால், அவருக்குப் பின்னாலிருந்து நிதியமைச்சர் காப்பாற்றுகின்றார், என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்நிலையில், சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்குமாயின் அதற்கான காப்புறுதியை பயன்படுத்திக்கொள்ளுமாறு லிற்றோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெஷரா ஜயசிங்க தெரிவித்துள்ளார். ஆனால், வெடிப்பது சமையல் எரிவாயுவின் அடுப்புகளாகும்; இதற்கு பொறுப்பானவர்கள் யார்? முதலாவது பொறுப்பு அரசாங்கத்தையே சாரும்.

வரிசையில் நின்றிருந்தவர்கள் மயங்கிவிழுவது, மரணமடைவது ஒன்றும் புதிதல்ல. என்றாலும், சமையல் எரிவாயு சிலிண்டர்களைக் கொள்வனவு செய்வதற்காக வரிசையில் நின்று மயங்கிவிழுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

விலையேற்றத்தால் சாதாரண மக்கள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாவார்கள். எரிவாயு தட்டுப்பாட்டால், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் கூட சமையலறைக்குப் பின்பாக தற்காலிக கூடாரங்கள் அமைந்து, விறகு அடுப்புகளில் சமைக்கப்படுகின்றன.

நகர்ப் புறங்களின் விறகின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அங்காடிகளிலும் பொலித்தீனால் பொதியிடப்பட்டு விறகு கட்டுகள் விற்கப்படுகின்றன. மறுபுறத்தில், காடுகளும் இயற்கை வனாந்தரங்களும் அழிக்கப்படுகின்றன.

இந்நிலை தொடருமாயின், எதிர்கால சந்ததியினருக்கு வரண்ட பூமியே மிஞ்சும். பசுமையை உறிஞ்சியெடுத்து எரியூட்டி, சுற்றாடலை மாசுப்படுத்தும் நிலைமை அதிகரித்துள்ளது என்பதையும் பொறுப்பு வாய்ந்த அரசாங்கமெனில் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எரிவாயு அடுப்புகள் வெடித்தமையால் உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன; எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மன்னார், சிலாபம் ஆகிய இடங்களில் அப்பாவி மக்களின் வீடுகள் முற்றுமுழுதாக எரிந்து சாம்பராகியுள்ளன. இவற்றுக்கெல்லாம் பொறுப்புகூற வேண்டியவர்கள் யார்? நட்டஈடு பெற்றுக்கொடுப்பவர்கள் யார்?

வரிசையும், வரிசையில் நிற்கவைத்தலும் வெவ்வேறானவை என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும். இருட்டில் இருந்துகொண்டு பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது என்பதே எமது கணிப்பாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

சந்தோஷங்கள் என்பன இரண்டு வகைகளில் வந்து சேர்கின்றன. ஒன்று புற உலகினூடாக வருவது. மற்றையது, தன்னுள் வியாபித்துப் பிரகாசிப்பது ஆகும்.

புற உலகில் சந்தோஷங்களை எப்படி அனுபவிக்கின்றோம் என்பதை ஆராய்வோம்? எம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள், இயற்கை வழங்கும் கொடைகளாகும்.

மனிதரை மட்டும் நோக்காது, பரந்த வானம், விருட்சங்கள் மலைகள், மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீரில் வாழ்வன என அனைத்தும் எம்மை அசத்தும் உயிரினங்களாகும். இறைவன் படைத்தவைகளை இரசித்தால் அதுவே, பேரின்பம் ஆகும்.

அடுத்து, தன்னுள் இருந்து பிரகாசிக்கும் களிப்பு, எப்படி முகிழ்கின்றது என்பதை விவரிக்க முடியாத, யோக நிலையாகும். மனப்பக்குவம் உள்ளோர், தமக்குள்ளே எல்லையற்ற பரம் பொருளூடாக, இதயத்துக்குள் சந்தோஷத்தை அனுபவித்த வண்ணம் இருக்கின்றார்கள்

கோபம், குரோதம், பொறாமை இல்லாமல், மனதை நிர்மலமாக்கினால், அகத்துக்குள் இறைவனை நிறுத்திப் பேரானந்தம் பெறலாம். இது நிச்சயமானது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

மீண்டும் மீண்டும் ஒலிக்கும்

# ஊடகக் குரல்களுக்கான நீதி

லக்ஸ்மன்

உரிமைகளுக்கான குரல் கொடுப்புகளே போராட்டங்களைத் தோற்றுவிக்கின்றன. அவற்றின் தோற்றம் மிகப் பெரும் பாதகங்களை கொண்டுவந்து விடுகின்றன. இதில் மிகுந்த கொடுமைகளைச் சந்திக்கின்ற ஒரு பிரிவினர் ஊடகத் தரப்பினராக இருக்கின்றனர்.

உலகத்தில் உரிமைகள் மறுக்கப்படுகின்ற இடங்களிலெல்லாம் மக்களுக்கான ஊடகப்பணியினை மேற்கொள்பவர்கள் நெருக்கடிகளையே சந்திக்கின்றனர். நெருக்கடி ஊடகக்காரர்களுடன் கூடவே சேர்ந்து வருவதாகும். இதுமறுக்க முடியாத உண்மை. இதற்கு இலங்கையும் விதிவிலக்கானதல்ல.

ரிச்சர்ட் டி சொய்சா, ஐயாத்துரை நடேசன், அற்புதன், கே.எஸ்.ராஜா, சந்திரபோஸ் சுதாகரன், சி. சிவமகராஜா, சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரவிவர்மன், தர்மரத்தினம் சிவராம், தேவிஸ் குருகே, பிரேமகீர்த்தி டி அல்விஸ், புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி, மயில்வாகனம் நிமலராஜன், ரேலங்கி செல்வராஜா, லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்நெலிகொட என நீண்ட பட்டியல் ஒன்றுடன் நாம் எல்லோரும் பயணிக்கிறோம். இந்தப்பட்டியல் 41பேர்வரை சென்றிருக்கிறது.

அனைத்து மொழிகளிலும் ஊடகமும் அரசியலும் இரண்டறக் கலந்தே இருக்கிறது. ஊடகங்கள் இல்லையேல் அரசியலே செய்ய முடியாது என்ற நிலைப்பாடும் இருக்கிறது. பல்வேறு துறைகளுக்குள்ளும் அரசியல் இருந்தாலும், ஊடகங்களின் மீதான அரசியல் நெருக்கடி மிக மோசமானது.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலங்களில்தான் அதிகமான ஊடகப் பணியாளர்கள் கடத்தப்பட்டார்கள்; கொல்லப்பட்டார்கள்; அச்சுறுத்தப்பட்டார்கள்; அடக்கப்பட்டார்கள்; பணியிலிருந்து ஒதுக்கப்பட்டார்கள். யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர், நடைபெற்ற சில சம்பவங்கள் இருந்தாலும் அவைகள் பெரிதாகக் கொள்ளப்படவில்லை. ஆனாலும், ஊடகவியலாளர் மீது நடத்தப்பட்ட வன்முறைகள், கடத்தல்கள், கொலைகளுக்காக நீதியினைக் கோருபவர்கள் ஊடகவியலாளர்களாகவும், அவர்களுடைய உறவுகளாகவுமே இருக்கின்றனர். பொதுவில் அதனை யாரும் கேட்டதாகத் தெரியவில்லை. மக்களுக்காகவும் மக்களுடைய உரிமைகளுக்காகவும் தொடர்ச்சியாக போராடுபவர்கள் தங்களுக்கெதிரான விடயங்களுக்கான நீதியினையும் தாங்களேதான் கேட்க வேண்டும் என்ற சூழலே காணப்படுகிறது.

கடந்த காலங்களில் சுட்டுக் கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்த விசாரணைகள் எதுவுமே முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. அவற்றுக்குக் காரணமானவர்கள் இனந்தெரியாதவர்களாகவே இப்போதும் பதிவுகளிலும் கோவைகளிலும் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என பல்வேறு குற்றச்சாட்டுகளை நாம் வைத்துக் கொண்டிருந்தாலும் தீர்வுகள் இல்லை. அச்சமும் நெருக்கடியும் நிறைந்த ஊடகப்பணியில் உயிரை விட்டதும், கொள்கைகளைத் துறந்து நாட்டைவிட்டு தப்பியோடி ஏதிலிகளாக வாழ்வதுமே ஊடகவியலாளர்களுக்கு மிஞ்சியிருக்கிறது.

போர்க்காலத்தில் ஆயுதம் தாங்கியிருந்த அரச சார்புக் குழுக்களாலும், அரச தரப்பினராலும் கொலைகள் நிகழ்த்தப்பட்டன. அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் சிவில் செயற்பாட்டாளர்களும் ஊடகப்பணியாளர்களும் கொல்லப்பட்டார்கள். இன்று வரை நீதி கிடைக்காத விடயத்துக்காக ஒவ்வொரு வருடத்திலும் ஊடக சங்கங்களும், குழுக்களும் நினைவு நிகழ்வுகளையும் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்துகின்றன; அறிக்கைகள் வெளியிடுகின்றன. அவற்றோடு அவை முடிந்து போகின்றவைகளாகவே இருக்கின்றன என்பதே இப் பத்தியின் ஆதங்கம்.

ஜனவரி 08ஆம் திகதியான இன்றைய தினம், 'சண்டே லீடர்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட நாளாகும். இந்தத் தினத்தில் கொழும்பிலும் நாட்டின் பல பகுதிகளிலும் நினைவு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுவது வழமை. இம்மாதம் 24ஆம் திகதி திருமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட சுப்பிரமணியம் சுகிர்தராஜன் நினைவுநாள். ஏப்ரல் 28ஆம் திகதி கொழும்பில் பாராளுமன்றக் கட்டடத்துக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்ட 'தராகி' டி.சிவராமின் நினைவு. மே 31ஆம் திகதி ஜி.நடேசன், கொல்லப்பட்ட நாள். இவ்வாறு ஒவ்வொரு வருடத்திலும் இந்த நினைவுகள் மீட்கப்படுகின்றன. மற்றொரு மக்களின் உரிமை மீதான அடக்குமுறைகளும் கெடுபிடிகளும் படுகொலைகளும் அதிகரித்த வேளையில் அவற்றை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமையானது நீதிகோரலுக்கான விடயமே. ஆனால் பலனில்லை என்ற பாங்கில் நாமெல்லாம் இருந்துவிடுகிறோம்.

நிமலராஜன் படுகொலையுடன் கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழ் ஊடகப்பரப்புக்கு எதிரான படுகொலை கலாசாரம் 41 ஊடகவியலாளர் மற்றும் ஊடகப் பணியாளர்களை கொல்லவோ அல்லது காணாமற்போகவோ செய்துள்ளது. இவர்களில் எவர் தொடர்பாகவும் இன்று வரை இலங்கை அரசு கருத்துகளை வெளியிடவில்லை. தென்னிலங்கையில் படுகொலையான அல்லது காணாமற்போயுள்ள எமது சக ஊடக நண்பர்கள் லசந்த விக்ரதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொட தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்ததுடன், ஊடகப் படுகொலைகளுக்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நல்லாட்சி அரசும் காண்பித்தது. ஆனால் இந்த விசாரணைகள் கூட தள்ளாடிக்கொண்டே இருந்தன. அடுத்து மாறிய அரசாங்கத்தின் பார்வையில்கூட அவை இல்லை.

தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் தொடர்பான விசாரணைகளை பெயரளவினில் கூட இந்த அரசும் ஆரம்பிக்க தயாராக இல்லை. இலங்கை ஜனாதிபதி முதல் பிரதமர், ஊடக அமைச்சர் என ஊடகவியலாளர்கள் பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்திருந்த போதும், அவற்றிற்கு உரிய அங்கிகாரமோ கவனமோ கொடுக்கப்படவில்லை.

இந்த வகையில்தான், கிடப்பில் போடப்படுகின்ற நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமமானதாகும் என்ற வகையில் எக்காலத்திலும் இவற்றுக்கான நீதியை நாம் கோரிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதே நிர்ப்பந்தம்.

இது இவ்வாறிருக்க, தற்போதைய நிலையில் சமூக ஊடகங்கள், இலத்திரனியல், இணையத்தள ஊடகங்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. இவை ஊடகவியலாளர்களுக்கான அச்சுறுத்தலாகவே இருக்கின்றன. அதேநேரத்தில் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தம்முடைய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதளவுக்கான கட்டுப்பாடுகள், பின்தொடர்தல்கள், விசாரணைகள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. இவை ஊடகத்தொழிலினை அச்சமின்றி மேற்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்துகிறது.

ஊடகவியலாளர்கள் படுகொலைகள், காணாமற்போதல்கள் மற்றும் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளில் பாதுகாப்பு தரப்பினரின் அல்லது துணைக்குழுக்களின் பங்கு இருக்கலாம் என்கிற சந்தேகம் தொடர்ச்சியாக இருந்தே வந்தது. ஆனால், குற்றவாளிகளைக் காப்பாற்றும் காரியத்தில் அரசாங்கம் ஈடுபடுகின்றது என்கிற சந்தேகம் எல்லோர் மத்தியிலும் இருந்தே இருக்கிறது. இந்தச் சந்தேகம் இன்னமும் தீர்க்கப்படவில்லை.

இருந்தாலும் இப்போது ஊடகங்கள் சார்ந்து சட்டங்கள், கட்டுப்பாடுகள், விசாரணைகள் மூலம் ஊடகத்தரப்பினரை அடக்குகின்ற நெருக்குகின்ற செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இவ்வாறான செயற்பாடானது சுய தணிக்கை நிலைமையிலலேயே இருப்பதற்கான அழுத்தத்தினை ஊடகத் துறையினருக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையின் ஊடக சூழலை தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள் வைத்திருக்கும் நிலைகளுக்கான ஏற்பாடுகளாக இவற்றினைப் பார்க்க முடியும். இது, எதிர்காலம் தொடர்பிலான அச்ச நிலையை ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்தி வருகிறது என்பதே கருத்து.

இந்த இடத்தில்தான், படுகொலை செய்யப்பட்ட மயில்வாகனம் நிமலராஜன் தொடக்கம் லசந்த விக்ரமதுங்க ஈறாக படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமற்போகச் செய்யப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும், ஊடகப் பணியாளர்களும் நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அடிப்படை அறமாகும். அதுதான், ஊடக சுதந்திரத்தின் அத்திவாரங்களை தொடர்ச்சியாக ஆட்டங்காணாமற் பாதுகாக்க உதவும் என்பது ஒவ்வொரு ஊடகப் பணியாளரதும் கோரிக்கையாகும்.

ஊடகக்காரர்களாகவும், ஊடகச் செயற்பாட்டுக்காரர்களாகவும், மனித உரிமைப் போராட்டக்காரர்களாகவும் செயற்பட்டு வருகின்ற ஊடகத்துறையினர் நெருக்கடியான இறுக்கத்துக்குள்ளேயே வைக்கப்பட்டிருக்கின்றமையானது நல்லதொரு ஜனநாயகச் சூழலாக இருக்காது.

ஒவ்வொரு வருடத்திலும் பல தடவைகளிலும் தொடர்ந்தும் கேட்கப்படுகின்ற, கோரப்படுகின்ற கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி கிடைப்பதற்கான வழிகள் திறக்கப்படுவதற்கு சாத்தியம் இந்த அரசாங்கத்தின் காலத்தில் ஏற்படுமா என்று கேட்க மாத்திரமே முடியுமானதாக இருக்கிறது.

மீண்டும் மீண்டும் வெளிவரும் ஊடகக் குரல்களுக்கான நீதி கிடைக்கவேண்டும்.

## கடிதங்கள்

நீரில் மிதக்கும் கிட்டங்கி வீதி:

### போக்குவரத்து செய்வதில் சிரமம்

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்ற கிராமங்களையும் கல்முனை நகரையும் இணைக்கும் கிட்டங்கி வீதியூடாகப் போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

விவசாயிகள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் நாளாந்தம் பயணிக்கும் இவ்வீதியில் வெள்ள நீர் பரவி வருவதால், கல்லோயா குடியேற்ற கிராமங்களிலுள்ள சவளக்கடை அன்னமலை, சொறிக்கல்முனை, 4ஆம், 5ஆம், 6ஆம், 12ஆம் கொளனிகள், நாவிதன்வெளி போன்ற பிரதேச மக்கள் பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் பயணிக்கின்றனர்.

இவ் வீதிக்கான நிரந்தர பாலம் அமைக்குமாறு நீண்டகாலமாக பிரதேச மக்களினால் விடுக்கப்படும் கோரிக்கை, இதுவரைக்கும் எந்த அரசாங்கத்தாலும் நிறைவேற்றப்படவில்லை. இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் சில இடங்களில் பல நாள்களாகப் பெய்து வரும் மழையால் அதிகமான மழை நீர் ஓட்டமில்லாமல், வயல் பகுதிகளில் தேங்கி நிற்பதால் நெற் பயிர்கள் அழுகும் நிலைக்குள்ளாகி உள்ளதாக பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

-பாறுக் ஷிஹான்



LK Newspapers Viber Community





பண்டிகைக் காலங்களில் குப்பைகளால் நிறையும் நகர வீதிகள்:

# வேலைப் பழுவில் துப்புரவு பணியாளர்கள்

எஸ். மங்களதர்ஷினி
(நான்காம் வருடம், ஊடக கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)





நோயில்லாது வாழும் வாழ்க்கை குறைவில்லாத செல்வத்தையும் அழிவில்லாத புகழையும் பெற்றுத் தரும். தனிநபர் தம்மையும் தாம் சார்ந்த சூழலையும் எப்போதுமே தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். அதிகமானோர் தாம் சார்ந்த சூழல் பாதுகாப்பின் மீது ஆர்வமற்று அலட்சியப் போக்கில் செயற்படுகின்றனர். ஆனால், எமது சுற்றாடலை மிகத் தூய்மையாக வைத்து பேணிப் பாதுகாப்பதையே தன் வாழ்க்கைத் தொழிலாக மேற்கொள்பவர்கள் துப்புரவு பணியாளர்கள்.

வருடாவருடம் மக்களிடம் அத்தியாவசியமான தேவைகளுக்கு பணம் இருக்கிறதோ இல்லையோ, பண்டிகைக் காலங்களில் ஆடம்பரச் செலவுகளுக்கு மட்டும் குறைவில்லை.

மிக அண்மையில், 2021ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையும் புதுவருடப்பிறப்பு அடுத்தடுத்து மக்களால் கொண்டாடப்பட்டன. பொருளாதார நெருக்கடி நிலை தலைவிரித்து ஆடுகின்ற போதும்கூட, கடனை பெற்றேனும் பொதுமக்கள் கொண்டாட்டங்களில் மூழ்கித் திளைத்தனர்.

பண்டிகை காலத்திலும் கூட தமக்கான விடுமுறையைப் பெற்று, கொண்டாடிக் களிக்காமல், துப்புரவு பணியாளர்கள் தம்மை பணியில் ஈடுபடுத்திக்கொண்டனர். ஒரு நாளின் அதிகாலையில் தொடங்கும் இவர்களின் பணி, மாலை வரை தொடர்கின்றது. எப்போதுமே கைகளில் விளக்குமாறுகளுடனும் தள்ளுவண்டிகளுடனும் காட்சியளிக்கின்றனர்.

மக்களுக்கு தாம் பயன்படுத்தும் குப்பைகளை வகை பிரித்து போடும் பழக்கம் இல்லை. பிளாஸ்டிக், பொலித்தீன், கடதாசி, உணவுக்கழிவுகள் என அனைத்து பொருட்களையும் ஒன்றாகக் கலந்து குப்பைத் தொட்டிகளில் கொட்டி விடுகின்றனர்.

இவற்றைத் தனித்தனியாக வகை பிரித்துக் கொள்வதே துப்புரவு தொழிலாளர்களின் வேலைத் பழுவுக்கான பிரதான காரணியாக அமைகின்றது. எவ்விதமான அருவெறுப்பும் இன்றி, எமது குப்பை கூளங்களை, வெறும் கைகளைப் பயன்படுத்தி வகை பிரிக்கின்றனர். குப்பையை வீதியில் விட்டுச் செல்வதால் சூழலில் துர்மணம் வீசத் தொடங்குகிறது. வீதியால் செல்லும் போது வீசும் துர்மணத்தை, சுவாசிக்க முடியாமல் நாம் மூக்கை மூடிக்கொண்டு கடந்து செல்கிறோம். ஆனால், அவற்றை அப்புறப்படுத்தி, பின்னர் அதே கைகளால் தமது அன்றாட உணவை உட்கொள்ளும் தரப்பினரைப் பற்றி நாம் சிந்திக்கின்றோமா?

அன்றாடம் எமது செயற்பாடுகளின் மூலம் உருவாகும் குப்பைகள், சூழலில் சேரும்போது சூழல் மாசடைகின்றது. அவை, நீர் வழிந்தோடக்கூடிய வடிகான்களில் தங்கும்போது, நீர்ச்சூழலும் மாசடைகின்றது. நெரிசலாக மக்கள் வாழும் நகரப் பகுதிகளில், அதிகளவான தொற்று நோய்கள் பரவுவதற்கு இதுபோன்ற மக்களின் அக்கறையற்ற செயற்பாடுகளே காரணமாகின்றன.

துப்புரவு தொழிலில் ஈடுபடுபவர்களில், இளைஞர்களை விடவும் 50 வயதைக் கடந்த முதியோரே அதிகளவில் ஈடுபடுகின்றனர். உழைத்து ஓய்ந்து ஆறுதலாக இருக்க வேண்டிய காலத்திலும் உழைப்பை மக்களுக்காக வழங்குகின்றனர். அவர்களின் அயராத உழைப்புக்கு ஊக்கம் அளிக்காவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாது இருக்கலாம்.

ஆனால், இது போன்ற பண்டிகை காலங்களில், நாம் அவர்களுக்கு உபத்திரவமாகவே இருந்துள்ளோம். அவர்களின் வேலைப்பழுவை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளோம்.

நகரப்பகுதிகளைப் பொறுத்தளவில், பெரும்பாலும் பண்டிகைக் காலங்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. கொழும்பு போன்ற பெருநகர பகுதிகளில் அதிகளவான பட்டாசு கடைகளைக் காணமுடிந்தது. கொரோனா நிலைமையில் நாடே பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்த போதும் கூட, பட்டாசு கொள்வனவு அதிகளவில் இடம்பெற்றிருந்தது.

மக்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவழித்து தொகை தொகையாக பட்டாசுகளை வெடித்துத் தீர்த்தனர். அவர்களின் கொண்டாட்டங்கள் எல்லாம் தீர்ந்தவுடன் சூழலில் மிஞ்சியது வெறும் குப்பைகள் மட்டுமே. கொழும்பு நகர பகுதிகள் பட்டாசுக் குப்பை மேடுகளால் நிறைந்திருந்தன. வெடித்துச் சிதறிய கடதாசி துண்டுகளால் சூழல் மாசடைந்திருந்தது. அதிர்ச்சி தரும் சத்தத்தால் ஒலி மாசடைந்தது. வெளியாகிய புகையால் வளியும் நச்சுத் தன்மையானது.

அன்றாடம் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை, இதுபோன்ற அற்ப செயல்களில் வீணடிப்பதை விடவும் கொரோனாவால் பாதிப்புற்றோருக்கும் நமக்காக சேவையாற்றும் துப்புரவு தொழிலாளர்களுக்கும் உதவியாக அளித்திருக்கலாம். ஆனால், நம்மில் எத்தனை பேர் அதனைச் செய்தோம்?

வருடத்தின் முதல் நாள் என்றும் கூடப் பாராது, இத்தகைய பணியாளர்கள் மட்டும் எவ்வித கொண்டாட்டங்களுக்கும் இடமளிக்காது தமது கடமைகளில் ஈடுபட்டனர். நாம் வெடித்துத் தீர்த்த பட்டாசு குப்பைகளை எல்லாம் அப்புறப்படுத்தி சுற்றாடலைத் தூய்மையாக்கினர்.

பண்டிகை காலங்களில் கொண்டாட்டப்பட வேண்டியவைதான். வருடம் முழுவதும் சேமித்த பணத்தை ஒரே நாளில் அழித்துத் தீர்ப்பது அவசியமல்ல. எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் நெருக்கடி நிலைமைகளை கருத்திற்கொண்டு அநாவசிய செலவுகளைத் தவிர்த்து செயற்படல் தற்காலத்துக்குப் பொருத்தமானதாகும். கொண்டாட்டங்களில் ஈடுபடுவோர் பாதிக்கப்பட்டவர்களுக்கு இயன்றளவு உதவமுடியும். வீண் செலவுகளுக்கு பணத்தை செலவிடுவதை விடவும் சமூக நலப் பணிகளில் செலவிடுவது தர்மமாகும்.

பண்டிகை காலங்களில் விழிப்புணர்வாக செயற்பட்டு சூழலை மாசடைய வழிவகுக்காது, மனிதநேயப் பண்புகளுடனும் சூழல்நேயப் பண்புகளுடனும் செயற்பட்டு, பண்டிகையை இன்பமானதாக மாற்றியமைக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.





சுகாதார தேவைகளுக்காக ஏங்கித்தவிக்கும் மக்கள்

# மூடப்பட்டுள்ள வைத்தியசாலைகள்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com




“நாங்க காட்டுப் பகுதியை அண்டி வாழ்ந்து வருகின்றோம். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் காட்டு யானைகளின் தொல்லைகளுக்கும் அட்டகாசங்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றோம். இதற்கு மேலாக வறுமை, பூச்சிகளின் கடிகளுக்கும் உட்பட்டு, சொல்லொணாத் துயரங்களுடன்தான் எமது வாழ்வு நகர்ந்து கொண்டிருக்கின்றது. இத்தகைய துயரங்களுக்கும் துயரமான கதை ஒன்றுண்டு. அதுதான், எமது கிராமத்தில் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டு இதுவரையில் திறந்து வைக்கப்படாத வைத்தியசாலையாகும். அதனையாவது திறந்து மருந்துகள் கொடுப்பார்களாயின் எமக்கு அது எமது வாழ்வில் ஒரு வரப்பிரசாதமாகவே கொள்வோம்” என்றார்கள் திக்கோடை கிராமத்தைச் சேர்ந்த கிராமவாசிகள்.

மட்டக்களப்பு மாவட்டம், படுவான்கரைப் பெரு நிலப்பரப்புக்கு உட்பட்ட போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் திக்கோடைக் கிராமத்தில் அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட வைத்தியசாலை அமைந்துள்ளது. அப்பகுதி மக்கள் இன்றுவரை சுகாதார சேவையைப் பெறுவதற்கு மிகவும் இன்னலுற்று வருகின்றனர். அப்பிரதேச மக்களின் அதீத வேண்டுகோளுக்கிணங்க, கிழக்கு மாகாண சபையால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எனினும் அனுமானான சுகாதாரத் தேவை என்பது, அந்தப் பிரதேசத்தைச் சார்ந்துள்ள பல கிராம மக்களுக்கு இன்றும் எட்டாக்கனியாகவே அமைந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க, தற்போதைய காலகட்டத்தில் மிகவும் கொடூரமான தொற்றா நோய்களும், தொற்றும் நோய்களும் கிராமங்களை தொடக்கம் நகரங்கள் வரைக்கும் நாளுக்கு நாள் பல்கிப் பெருகிக் கொண்டேதான் செல்கின்றன. இவ்வாறான நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காகவும், மருந்துகள் பெறுவதற்காகவும், தாம் பழுகாமம், களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு, கல்முனை உள்ளிட்ட மிகத்தொலைவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அதிக செலவு செய்து, பிரயாணம் செய்துதான் வைத்திய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைகளிலேயே இன்றைய நவீன யுகத்திலும் வாழ்வதை நினைத்து கவலை தெரிவிக்கின்றார்கள்.



“எமது சுகாதார நடவடிக்கைகள் தொடர்பில் ‘கேட்பாரும் இல்லை; பார்ப்பாரும் இல்லை’. இந்த நிலைமையை இன்னும் தொடர விடாமல் பார்க்க வேண்டியுள்ளது” என திக்கோடை கிராமத்தைச் சேர்ந்த கிராமவாசி ஒருவர் தெரிவிக்கிறார்.

திக்கோடைக் கிராமத்தில் அமைந்துள்ளதைப் போன்று கிழக்கு மாகாணத்தில் ஏனைய பல பகுதிகளிலும், வைத்தியசாலைகள் புதிதாக அமைக்கப்பட்டும் அது மக்களுக்கு சேவை செய்யாமலுள்ளதா? அது அவ்வாறாயின், ஏன் இந்நிலையில் உள்ளது என்பது தொடர்பில் கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக வினவினேன்.

அந்த வகையில், ‘கல்முனை பிராந்திய சுகாதார சேவை பிரிவின்கீழ் 2017ஆம் ஆண்டில் அக்கரைப்பற்று ஆலிம் நகரில் 10.15 மில்லியன் நிதியிலும், திருக்கோவில் தாண்டியடியில் 11.25 மில்லியன் நிதியிலும், இறக்காமம் வான்காமத்தில் 10.00 மில்லியன் நிதியிலும், தலா ஒவ்வொரு வைத்தியசாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அதுபோன்று 2017ஆம் ஆண்டில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் கீழ் வெல்லாவெளி திக்கோடையில் 10.00 மில்லியன் நிதியிலும், வவுணதீவு பன்சேனையில் 2.00 மில்லியன் நிதியிலும், கிரான் கூளாவடியில் 2.00 மில்லியன் நிதியிலும், 2017,2018ஆம் ஆண்டுகளில் அதே மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் கீழ் செங்கலடி புலிபாய்ச்சகல்லில் 10.00 மில்லியன் நிதியிலும், கிரான் கோப்பாவெளியில் 10.00 மில்லியன் நிதியிலும் தலா ஒவ்வொரு வைத்தியசாலை கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மேற்படி மருத்துவ மனைகளைத் திறப்பதற்கான அனுமதி, சுகாதார அமைச்சிடமிருந்து இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை. இதன்காரணமாக குறித்த மருத்துவ மனைகளுக்கான ஆளணிகளும், நிரப்பப்படாமலுள்ளன. இருந்த போதிலும் ஏனைய மருத்துவ மனைகளிலிருந்து சுழற்சிமுறையில் சில ஆளணியினரைக் கொண்டு, வாரத்தில் சில நாள்களுக்கு மேற்படி சில மருத்துவமனைகளில் வைத்திய சேவைகள் வழங்கப்பட்டு வரப்படுகின்றன.

சுகாதார அமைச்சின் அனுமதியும், குறித்த மருத்துவ மனைகளுக்கான ஆளணிகளும் கிடைக்கப்பெற்றபின், இவ் வைத்தியசாலைகள் திறக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்’ என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் தகவல் அதிகாரி வைத்தியர் வ.குகேந்திரன், எழுத்து மூல அறிக்கை ஒன்றைத் தந்துள்ளார்.

மக்கள் வரிப்பணத்திலோ, அல்லது மக்களின் அபிவிருத்திக்காக வெளிநாடுகளின் உதவியுடனோ இவ்வாறு கிராமப்புற மக்களை மையமாக வைத்து, கிழக்கு மாகாணத்தில் புதிதாக 2017ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு 4 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும், 8 வைத்தியசாலைகளையும் மக்கள் பயன்பாட்டுக்கு விடுவது துறைசார்ந்தவர்களின் தலையாய கடமையல்லவா?

மேற்படி தகவல் அதிகாரி தெரிவித்தது போன்று, இவ்வாறு இந்த வைத்தியசாலைகளில் வாரத்தில் சில நாள்களில் மாத்திரம் மேற்படி சில மருத்துவ மனைகளில் வைத்திய சேவைகள் வழங்கப்பட்டு வந்தாலும் அது அப்பகுதி மக்களுக்கு சுகாதார ரீதியில் தன்னிறைவைக் கொடுக்கவில்லை எனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமின்றி கிழக்கு மாகாணத்தின் கிராமப்புறங்களில் வசிக்கின்ற மக்களின் சுகாதாரத் தேவைகளை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்வதற்காக அப்போதிருந்து கிழக்கு மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளின் பெரும் முயற்சியின் பலனாக கிழக்கில் புத்தாக 8 வைத்தியசாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், அதனை உரியமுறையில் திறந்து மக்கள் மயப்படுத்தி மருத்துவ சிகிச்சைகளை வழங்க வேண்டியது துறைசார்ந்தவர்களின் உன்னிப்பான செயற்பாடாகும்.

புதிய புதிய அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பிரதிநிதிகள் கொண்டு வருவதற்கு பல பிரயத்தனங்களை மேற்கொள்வது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், இவ்வாறு கட்டி முடிக்கப்பட்டு மக்கள் மயப்படுத்தப்படாமல் தேங்கிக் கிடக்கின்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கி, அவற்றை செயற்படுத்துவதற்கும் மக்கள் பிரதிநிதிகள் முன்வரவேண்டும் என பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.

குறிப்பாக, கிராமங்கள் உருவாகிய காலங்கள் தொடக்கம் சிறிய தலைவலிக்குக்கூட மிக நீண்ட தொலைதூரம் சென்று சிகிச்சை பெற்று வந்த மக்களுக்கு கடந்த யுத்தசூழல் அது இன்னும் விரிவடையச் செய்திருந்தது. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 14 வருடங்கள் கழிந்துள்ள நிலையில், கிராமங்கள் தோறும் ஆங்காங்கே சிற்சில அபிவிருத்திகள் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும், அதிலும் தன்னிறைவு காணாத மக்களாகவே இன்னும் கிராமப்புற மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில்தான் சுகாதார வசதிவாய்ப்புகள் என்பது எட்டாக்கனியாகவே வாழ்ந்து வரும் அம்மக்கள் மத்தியில் இவ்வாறு சிறிய அளவிற்கேனும் சிகிச்சைகளை வழங்கக்கூடிய வைத்தியசாலைகள் (ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவு) நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றின் பலாபலன்களை மக்கள் அனுபவிப்பதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும், முன்னின்று செயற்பட வேண்டும்.

தகவல் அதிகாரியின் கருத்திற்கிணங்க, மேற்படி மருத்துவமனைகளைத் திறப்பதற்குரிய அனுமதி சுகாதார அமைச்சிடமிருந்து இதுவரையில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குக் கிடைக்கப் பெறவில்லையாயின் அதனைப் பெற்றுக் கொடுப்பது யார் எனவும் மக்கள் கேள்விகளை முன்வைக்கின்றனர்.

எனவே, எது எவ்வாறாயினும், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளும், முன்னின்று செயற்பட்டு கிழக்கில் 2017இல் இருந்து நிர்மாணிக்கப்பட்டுள்ள 8 புதிய வைத்தியசாலைகளையும் திறந்து வைத்து, அப்பகுதி மக்களின் சுகாதாரத் தேவையில் ஒரு சிறிதளவேனும் பூர்த்திசெய்ய அனைவரும் ஒருமித்து துரிதகதியில் செயற்பட வேண்டும் என்பதுவே அப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

LK Newspapers Viber Community





## இருள் அகற்றி ஒளி பாய்ச்சும் இறைதொண்டு:

# நேர்ச்சை பிரார்த்தனை

### கல்முனை கடற்கரைப் பள்ளியின் 200ஆவது கொடியேற்ற விழா:



அஸ்லம் எஸ். மௌலானா

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 200ஆவது வருடாந்த கொடியேற்ற விழா, நான்காம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி, சிறப்பாக நடைபெற்று வருகின்றது. 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, கந்தூரி அன்னதானத்துடன் விழா நிறைவு பெறவிருக்கிறது.

இந்த 12 நாள்களும் மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமாஅத்தினரின் றிபாஈ றாதிப், பாவாக்களின் அற்புத செயற்பாடுகள், உலமாக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவுகள், ஸலவாத் மற்றும் நேர்ச்சை வழிபாடுகள் எனப் பல்வேறு விசேட நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த காலங்களில், இக்கொடியேற்ற விழாவில் கடற்கரைப் பள்ளி வளாகம் பூராகவும் கடைகள், உணவகங்கள் அமைக்கப்பட்டிருப்பது வழமையாகும். இதன்போது, நாட்டின் பல பாகங்களிலும் இருந்து அலையெனத் திரண்டு வருகின்ற மக்கள், இங்கு பொருட்களை வாங்கிக் கொள்வதும் உணவு வகைகளை உண்டு மகிழ்வதும், சிறுவர்களுக்கான விளையாட்டுகள், களியாட்ட நிகழ்வுகளில் ஈடுபடுவதும் விசேட அம்சங்களாக இருக்கும்.

இவை தவிர, நேர்ச்சை வைத்து, தமது தேவைகள் தொடர்பில் பிரார்த்தனைகளில் ஈடுபடுவது மற்றொரு சிறப்பம்சமாகும். நாகூர் ஆண்டகை ஷாஹுல் ஹமீத் வலியுல்லாஹ் அவர்கள் மீது நம்பிக்கை, நேசம் கொண்ட பக்தர்கள், வலியுல்லா அவர்கள் தங்கிச் சென்றதாகக் கூறப்படும் தர்ஹா ஷரீபில் இவ்வாறு நேர்ச்சை வைத்து பிரார்த்திக்கிறார்கள்.

இவற்றுக்காக அலைமோதுகின்ற மக்களைக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும், அவர்களுக்கு உதவுவதற்குமென பொலிஸாரும் தொண்டர் படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்கள்.


எவ்வாறாயினும், கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டதால், 2020, 2021 ஆண்டுகளில் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீப் நிர்வாகத்தினர் மாத்திரம் பங்குபற்றி, உரிய தினங்களில் கொடியேற்றப்பட்ட போதிலும் வழமைபோன்று கொடியேற்ற விழா இடம்பெறவில்லை.

இம்முறை கூட, கொடியேற்ற விழா இடம்பெறுகின்ற போதிலும் சுகாதார நடைமுறைகளுக்கமைவாக மட்டுப்படுத்தப்பட்டளவில் மக்கள் அனுமதிக்கப்படுவதுடன் கடைகள், உணவகங்கள், சிறுவர் விளையாட்டுகள் போன்றவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், இது 200ஆவது கொடியேற்ற விழா என்பதால், இம்முறை அதைச் சிறப்பிக்கும் முகமாக வர்த்தமானி பத்திரிகை மூலமாக, இந்நிகழ்வு ஒரு தேசிய கலாசார விழாவாக அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், வியாழக்கிழமை (06) விழாவில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும பங்குபற்றி நினைவு முத்திரையையும் வெளியிட்டு வைத்தார். இவ்வாறு, தேசிய அங்கிகாரம் வழங்கிச் சிறப்பிக்கும் அளவுக்கு, இவ்விழா ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?








கிழக்கு மாகாணத்தின் 'முகவெற்றிலை' என வர்ணிக்கப்படுகின்ற கல்முனையின் பிரதான வரலாற்றுச் சின்னமாக, கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா திகழ்கிறது.

கல்முனை நகரத்துக்குக் கிழக்கே பரந்து விரிந்து கிடக்கும் வங்கக் கடலோரத்தில் இப்பள்ளிவாசல் அமைந்துள்ளதால், இதனை எல்லோரும் 'கடற்கரைப் பள்ளிவாசல்' என்று அழைக்கின்றனர்.

இப்பள்ளிவாசலுக்கு வரலாற்று ரீதியாகச் சிறப்பு சேர்ப்பதுதான், நாகூர் ஆண்டகை என்று அழைக்கப்படுகின்ற சங்கைமிகு சாஹுல் ஹமீத் வலியுல்லாஹ் அவர்களின் பெயரால் வருடா வருடம் நடத்தப்படும் கொடியேற்ற விழாவாகும். ஒவ்வோர் ஆண்டும் இஸ்லாமிய பிறைக் கலண்டரின் பிரகாரம், ஜமாதுல் ஆகிர் முதல் பிறையன்று கலாசார, பாரம்பரியங்களுடன் கொடியேற்றப்படும். இறை தூதர், இறுதி நபி பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் 23 ஆவது தலைமுறையில் செய்யது ஹசன் குத்தூஸ் செய்யது பாத்திமா தம்பதிகளுக்கு மகனாக தென்னிந்தியாவின் மாணிக்கப்பூர் எனும் ஊரில் பிறந்த நாகூர் ஆண்டகை எனும் சங்கைமிகு சாஹுல் ஹமீத் வலியுல்லாஹ் அவர்களின் நினைவாகவே, இக்கொடியேற்ற விழா நடத்தப்பட்டு வருகின்றது.

இஸ்லாத்தின் ஞான விளக்கத்தை பரந்த உலகின் பல்வேறு பாகங்களுக்கும் எடுத்துச் சென்று, இருள் அகற்றி ஒளி பெறச் செய்து, இறை தொண்டாற்றிய ஒரு பெரும் மகானே சங்கைமிகு சாகுல் ஹமீத் வலியுல்லாஹ் அவர்களாவார். இவர், இறையடி சேர்ந்து 200 ஆண்டுகள் கடந்த பின்னரும் அவரது சன்மார்க்கப் பணிகள் நினைவுகூரப்பட்டு வருகின்றன.

ஞான வழி நடக்கவிழைந்து, ஆண்டவனின் பாதையில் இறங்கி, பிறந்தகம் விட்டு வெளியேறிச் சென்று, பெரும் அற்புதங்கள் செய்த ஓர் இறைநேசச் செல்வரான சாஹுல் ஹமீத் வலியுல்லாஹ் அவர்கள், தனது எட்டாவது வயதிலேயே குர்ஆன் ஓதி முடித்திருக்கிறார்கள் என்று வரலாறு கூறுகிறது.

அதன் பின்னர், தனது இளம் வயதிலேயே இஸ்லாமிய நற்பணி நோக்கத்துடன் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்ற அவர், தனது ஆத்மீக சுற்றுலாவின் ஒரு பகுதியாக, இலங்கைக்கும் வருகைதந்து, தப்தர் ஜெய்லானி எனும் இடத்தை அடைந்து, அங்கு புனித ஸ்தலங்களில் ஒன்றாகிய நபி ஆதம் (அலை) அவர்களின் பாதம் பட்ட இடத்தையும் தரிசித்து, கல்முனையை வந்தடைந்திருக்கிறார் என்று அந்த வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அந்தச் சமயத்தில், கல்முனைக்குடி பிரதேசத்தில் மார்க்கத்திலும் கல்வி ஞானத்திலும் ஈடுபாடு கொண்டிருந்த மர்ஹூம் முஹம்மது தம்பிலெப்பை என்பவர், கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையில், கடலில் நீராடவும் சுத்தமான காற்றை சுவாசிக்கவும் கல்முனைக்குடி கடற்கரை ஓரம் ஒரு குடிசையை அமைத்து வாழ்ந்து வந்தார்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை; தமது இரவுத் தொழுகையின் பின்னர், அயர்ந்து தூங்கி விட்ட முஹம்மது தம்பிலெப்பை அவர்களின் கனவில், பூரண சந்திரனை ஒத்த முகத்துடன் தலையில் பச்சை நிற தலைப்பாகையுடன் ஒருவர் தோன்றி, 'உமது குடிசையின் கிழக்கே சுமார் 100 யார் தூரத்தில் கடற்கரை மணல் குவித்து வைத்திருக்கிறேன். நீ அவ்விடம் சென்று அடையாளம் இருக்குமிடத்தில் எனது நினைவாக ஓர் இல்லம் அமைத்து விடும். இன்றுடன் உம்மைப் பீடித்துள்ள நோயும் அகன்று விடும். நான் நாகூர் ஆண்டகை ஷாகுல் ஹமீத்' எனவும் கூறி மறைந்து விட்டதாக, அந்த வரலாறு கூறுகின்றது.

முஹம்மது தம்பிலெப்பை அவர்கள் கண்விழித்துப் பார்த்தபோது, பொழுது புலர்ந்திருந்தது. அவர்களின் உடலில் இருந்த நோய் முற்றாகக் குணமாகி இருந்ததோடு, நோய் இருந்தமைக்கான எவ்வித அடையாளமும் இருக்கவில்லை. உடனே, இறைவனைப் புகழ்ந்தவராக குறிப்பிட்ட மண் குவியலைத்தேடிச் சென்று கண்ணுற்று, அருகில் இருந்த மரங்களைத் தறித்து, தடிகளைக் கொண்டு அவ்விடத்தில் பந்தல் அமைத்தார்.

இச்சம்பவங்களை அன்றைய ஜும்ஆத் தொழுகையின் பின்னர், பொது மக்களிடம் கூறவே, அவர்களும் அவ்விடம் வந்து தடயங்களைக் கண்ணுற்றதோடு, குறித்த பந்தலை செப்பனிட்டு தர்காவாக மாற்றினர். அத்துடன், சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் அவர்களது பெயரில் மௌலூது ஓதி குர்ஆன் பாராயணம் செய்ததோடு அவர்களின் பெயரில் அன்னதானமும் வழங்கினர்.

தொடர்ந்தும், சாஹுல் ஹமீது வலியுல்லா அவர்களின் பெயரில் மக்கள் அதிக நம்பிக்கை கொண்டு அவ்விடத்தில் கூடி, நினைவுகூர்ந்து வந்ததுடன் சாஹுல் ஹமீது வலியுல்லா அவர்கள் வபாத்தான ஜமாதுல் ஆகிர் மாதம் தலைப்பிறையுடன் இத்தர்காவில் தொடர்ந்து 12 நாள்கள் அவர்களின் பெயரில் மௌலூது ஓதப்பட்டு பன்னிரெண்டாம் நாள் மாபெரும் கந்தூரி அன்னதானம் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டது.

பின்னர் காலத்துக்குக் காலம் புனரமைக்கப்பட்டு வந்த இப்பள்ளிவாசலில், ஏழு அடுக்குகளைக் கொண்ட பிரமாண்டமான மினராவும் மூன்று அடுக்குகளைக் கொண்ட சிறிய மினராவும் வானுயர்ந்து கம்பீரமாகக் காட்சி தருகின்றன. அத்துடன், புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள மூன்று சிறிய மினராக்களும் இங்கு காணப்படுகின்றன. இவற்றிலேயே வருடா வருடம் கொடியேற்றப்படுகின்றன.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமியின்போது, இப்பகுதியில் பெரும் கட்டடங்கள் கூடச் சரிந்து விழுந்து பாரிய அழிவுகளும் உயிரிழப்புகளும் ஏற்பட்ட போதிலும், கடற்கரை எல்லையிலிருந்து 20 மீற்றர் தூரத்துக்குள் இருக்கும் மினராக்களுக்கோ பள்ளிவாசல் தர்ஹாவுக்கோ எவ்வித சேதமும் ஏற்படாதிருந்தமை பேராச்சரியமாகும்.

தவிரவும், கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை கொடியேற்ற விழாவில் முஸ்லிம்கள் மாத்திரமல்லாமல் இன, மத, பிரதேச பேதமின்றி அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மக்களும் கலந்து மகிழ்ச்சி பெறுகின்றனர். அதனால் இது இன நல்லுறவுக்கான கேந்திர முக்கியத்துவம்மிக்க தளமாக நோக்கப்படுகிறது என்பது, கல்முனை நாகூர் தர்ஹாவின் சிறப்புக்கு மேலும் ஒரு சிறப்புச் சேர்க்கும் அணிகலனாகும்.







விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 08 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.